Messrs. S. Rajah and A. Kanagasabai, Sanitary Inspectors, Seremban, have been transferred to Tampin and Gemas respectively.

Mr. J.T. Thambithurai has come over here and assumed duty as Financial Assistant, P.W.D.

Pahang.

A Badminton Tournament for the "Ong Cheng Jim Badminton Challenge Cup" was held in Kuala Lipis. There was a very keen competition among the teams of the following Clubs:—

Lipis Recreation Club, Chinese Club, Clifford School, Medical Club, Malay Club and Pahang, Club.

The final was played at the Lipis Recreation Club courts between the teams representing the Lipis Recreation Club and the Chinese Club on 9th August, 1937, when the former defeated the latter.

The following who are all members of the Jaffnese Co-operative Society represented the winning team:—

Messrs. E. Chelliah, M. Nadarajah, T. Canagendram, M. Kathiravelu, N. Selvamanikam and S. Sittampalam.

The marriage of Mr. A. Sinnathamby, District Office, Raub, to Miss Tavanayaki Ammal Kandiah, eldest daughter of Mr. K. Kandiah, Financial Assistant, P.W.D. Kuala Lipis, took place in the presence of a large gathering of relatives and friends, at the bride's residence on Tuesday the 17th August, at 4 a.m. The residence was tastefully decorated for the occasion and floodlit. There was an 'At Home' at 5 p.m. the same day when speeches were made wishing the new couple all prosperity.

It is regretted to note that a son of Dr. P. Ponnampalam, Assistant Medical Officer, Bentong, met with an accident at Kuala Lumpur resulting in a simple fracture of his right leg; we are glad however that he is making good progress.

With the closing of the Government English Schools in Pahang after the 2nd term, all the teachers were in Raub for a fortnight undergoing physical training under the Superintendent of Physical Education, F.M.S. From Bentong all were away except Mr. N. Appudurai, Head Master.

It is understood that Mrs. R. Arumugam of P.W.D. Bentong, and children will be leaving on a holiday to Ceylon in the near future.

Mr. K. Muthucumaru assumed the duties of Chief Clerk, District Office, Bentong, in succession to Mr. Pereira who has gone on transfer to Klang.

Mr. M. Thambiah of the District Hospital is blessed with a son.

Mr. S. Selvaratnam of the Government English School and Mrs. Selvaratnam and Mrs. S. Thurairajasingam and family left for Ceylon on a holiday.

Mr. P. Sabapathy, Head Overseer, Kuantan, and Mrs. Sabapathy have returned from Ceylon.

Preparations are in hand for the entertainment of His Highness the Sultan of Pahang on the occasion of his Official Visit to Kuantan from September, 7th to 12th. The Indo-Ceylonese Community will entertain H.H. and party to a dinner on the 8th September.

General.

Miss Ranee Paul, Messrs. Phillips, Perinpanayagam, Nesiah and Vanniasingam (Ceylon Delegates to the World Education Conference at Tokyo) were entertained to tea by the Ceylon Tamils' Association, Singapore on Wednesday 25th August.

Another distinguished guest at the function was Dr. S.F. Chellappah, O.B.E., (Ceylon delegate to the Special conference organised by the League of Nations at Bandoeng, Java.)

Two well-known families were united by the marriage of Dr. K. Sivagnanaratnam son of Dr. C. Kanagaratnam, Medical Practioner, Jaffna and the late Mrs. Kanagaratnam with Miss Padmawathy only daughter of Mudaliar and Mrs. V. Ponnampalam of Urumparay on Thursday 9.9.37 at the Bride's residence.

A new Co-operative Hospital for Tholpuram, Jaffna. The ceremony of laying the foundation stone of this Hospital at the 11the mile post on the Manipay—Kayts Road was performed by Dr. S. Subramaniam (Retired Provincial Surgeon, Jaffna) on 26th August, 1937. We extend our congratulations to all those who are connected with this noble undertaking.

Jaffnese Youths' League, Kuala Lumpur. The members of the Jaffnese Youths' League, Kuala Lumpur will give a Variety Entertainment, at the Town Hall, on Saturday 25th September, 1937 at 8.30 p.m.

"வழி காட்டி"

——:o:——

யாழ்ப்பாணத்தவர் ஐக்கிய சங்க சஞ்சிகை.

———

பொருளடக்கம் பக்கம்.

பத்திராதிபர் குறிப்புகள் ... ... 1.

சீதனப்பேயால் சீரழிந்த குடும்பம் ... ... 4.

வெற்றி யாருடையது ... ... 6.

பெண்கள் நிலைமை ... ... 9.

இல்லறம் ... ... 12.

எங்கள் செல்வச் செல்விகளுக்கோர் உயர்வு ... ... 16.

சரஸ்வதி... ... ... 17.

எங்களிடத்தில் ரசீது, செக்றேள், பாக்கெட் செக்றேள், பில் புத்தகங்களும், அவ்டுமேன்ட், ஐ.ஒ.யூ., புறமெசரி நோட்டுகளும், திருமணப் பத்திரிகை முதலிய அச்சு வேலைகளும், இன்னும் ஸ்டேஷனரி சாமான்களும், சகாயமான விகிதத்திற்கும், குறித்த காலந்தவறமலும் செய்து கொடுக்கப்படும்.

தேவையானவைகளுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு ஆர்டர் செய்யுங்கள்.

இன்டர் நேஷனல் பிரின்டர்ஸ்,
27, ஜாவா ஸ்திரீட், கோலாலம்பூர்.

"வழி காட்டி"

யாழ்ப்பாணத்தவர் ஐக்கிய சங்க முன்னேற்ற உயரிய மாதப்பத்திரிகை.

மலர் க.	ஈசுர ஆண்டு, புரட்டாசித் திங்கள்.	இதழ் சு

பத்திராதிபர் குறிப்புகள்.

—:o:—

ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வு.

"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழா ரெனின்"

என்ற திருவள்ளுவர் வாக்குப்போல், கற்றதனாலாய பலனை நாம் அப்பரம் பொருளைத் தொழுவதால் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அப்பரனின் திருவருளாலேயே நாம் ஜனித்து, ஜீவித்து, வருகிறோமென்பதை உணர்ந்து நடந்து வருவோமாகில், நம் ஆன்மா கடைத்தேறும். பாதகம் தலைகாட்டா தொழியும். அக்கிரமம் அகன்று விடும். சாதுக்களாய் வாழ்ந்து சமூகப்பணி, தேசப்பணி செய்ய ஏதுவாயுள்ளதும் அதுவே. அவரே நாம் எடுத்துக் கொண்ட தொண்டுக்கும் தோன்றாத் துணைவராய் நின்று உதவி புரிவார்.

* * *

சீதனத்தால் வரும் கேட்டை மிக விளக்கமாகவும் சுருக்கமாகவும் "சீதனத்தினால் சீரழிந்த குடும்பம்" துலக்கிக் காட்டுகிறது. பாவம் ரூஜேஸ்வரி சீதனமில்லாததினால் இக்கதிக்காளானாள். ஆனால் சீதனத்தைக் கொடுத்துக் கலியாணஞ் செய்து கொண்ட ரத்னகுமாரின் மனைவியின் கதி இனி யாதாகும். பாவம் அதிக "ஆசை கோடி தரித்திரம்" என்பது உண்மையாயிற்று. எல்லாவற்றையும் உன்னித் தற்கால வாலிபர் அந்தச் சீதனப் பேயை ஒறுத்து விலக்கினாலொழிய பெற்றோரின் ஆதிக்கத்திற்குட்பட்ட பெண்களால் என்ன ஆகும். பெற்றோர் தம் மக்களின் பிற்கால நலனை நாடித் தங்களுக்குள்ளனவற்றைப் பிரித்துக் கொடுப்பார்கள். ஆனால் அதையே காத்து நின்று பெண்களை விவாகஞ் செய்பவர் அறவே ஒழிந்தாலொழிய நம் சமூகம் ஈடேறாது என்பது உண்மையே. பெற்றோர் தம் பெண்களுக்குக் கொடுக்கும் பணத்தைக் கொண்டு தாம் பணக்காரரென்ற பெயரெடுக்கவிரும்பும் ஆடவரையும், அந்தப் பணத்தைக் கொண்டு தமது கடனைத் தீர்க்க விரும்பும் ஆடவரையும், அந்தப்பணத்தை வீண் விரயம்செய்து செலவழித்து விடும் ஆடவரையும், அதையே கொண்டு சீவியம்பண்ணக் காத்து நிற்கும் ஆண்களையும், என்ன பெயரிட்டு எவ்விதமாய் அழைக்கலாமென எமக்குத் தெரியவில்லை.

* * *

வெற்றி யாருடையது என்று இன்னும் அறிந்து கொள்ள முடியவில்லை. பாவம் கனகத்தின் கதியாதாகுமோ! கமலம் கனகத்துடன் சேர்ந்து "சந்தன மரத்தைச் சேர்ந்த அகில் மரமும் சந்தன மணம் வீசப் பெறுவதுபோல்" நாளடைவில் திருந்தி வருவது கேட்டு மிகவும் சந்தோஷமுறுகிறோம். நல்லோருடன் சேர்வதால் பெருமையும் இழிந்தோருடன் சேர்வதால் இழிவும் நாளடைவில் அடைவது கண்கூடு.

* * *

சரோஜாவால் எழுதப்பட்ட பண்டைக் காலராணி பத்மினியின் சரிதை பெண்களுக்கு உற்சாகமளிக்கக் கூடியது. ஆபத்துக் காலத்தில் புருஷனைக் காப்பாற்றச் செய்யும் தந்திரம் பெண்கள் பலமில்லாதவரானாலும் மகா தந்திரசாலிகளென்பதைக் காட்டுகிறது. குதிரையின் குணமறிந்து அதற்குக் கடவுள் கொம்பு கொடுக்க வில்லையாம். ஆனால் முரட்டு எருதுக்கு ஏன் கொம்பைக் கொடுத்தாரோ தெரியவில்லை.

* * *

கணவனும் மனைவியும் என்ற விஷயமும் மிக அழகாக எழுதப்பட்டிருக்கிறது. கலியாணமானது நம் பூர்வீக மக்களால் தெய்வ அனுகூலமென்றே கருதப்பட்டு வந்தது. அதன்படியே தற்காலத்திலும் பலர் நம்பி வருகின்றனர். பூர்வ காலத்தில் முனிவர்களாலும், ரிஷிகளாலும், பதிவிரதைகளாலும் ஏற்பட்ட சாபங்களும், அதின் விமோசனத்தின்படியே அடுத்துவரும் பிறவிக

ளில் அவர்களுக்கு அமைவதும் எல்லாம் வினைப் பயனும் விதிவசமுமெனப் புராணங்கள் வாயிலாக அறியக்கிடக்கின்றன.

"தாரமும் குருவும் தலையிலெழுத்து" என்பது ஆன்றோர் வாக்கு. மற்றெதையும் மனுஷ எத்தனமென எண்ணினாலும், இந்த விவாக விஷயத்தை மட்டும் தெய்வ எத்தனமெனவே நம்மவர் முழு விசுவாசத்துடன் நம்பி வந்தனர்; வருகின்றனர். ஒரு பெண்ணுக்குப் பல ஆண்களையும்; ஒரு ஆண்மகனுக்குப் பல பெண்களையும் சடங்கு பேசிக் கடைசியில் ஒன்றுதானே பொருந்துவது வழக்கம். சில வேளைகளில் எல்லாம் பொருத்தி வந்தாலும் திடீரெனத் தாலிகட்டுவதற்குள் தடைபட்டு விடுகின்றது. அதைப் பார்த்தவர் "அது ஏதோ தெய்வ சம்மதமில்லை. "விதி இல்லை" என்று சமாதானம் கூறுவதைக் கேட்டிருக்கிறோம். அதன் கருத்து என்ன?

இப்படியே அப்பரம் பொருளின் ஆக்ஞைப்படி பிறந்து முதலும் நம் குழந்தைகட்கு ஏற்ற வரனை, ஊர் தேடினால்தானென்ன. பெற்றோர் தேடினால்தானென்ன; இல்லை அந்தப் பெண்ணே தேடினால்தானென்ன! என்ன இருந்தும் நம்மவர்க்கு மற்ற எச்சாதியார்க்குமில்லாத ஓர் மகத்தான பூஷணம் மனம், வாக்கு, காயம், என்னும் திரிகரண சுத்தியால் ஏற்பட்ட கற்பு என்னும் விலைமதிப்பற்ற பூஷணம் கொடுக்கப்பட்டிருக்கிறதே. பிற சாதியாரின் பாழாய்ப்போன நாகரீகத்தைப்பார்த்து நாம் நம் அரிய பூஷணத்தை விலக்கலாமா? நாணம், மடம் அச்சம், பயர்ப்பு, என்பதே நம் சகோதரிகட்குரிய விலையேறப் பெற்ற அணிகலன்கள். காலத்திற்கேற்ற கோலமாக நடந்து வீட்டுக்குள்ளேயே அடைபட்டிருக்க வேண்டுமென்றில்லாமல் சுயேச்சையாய் அதாவது தம் பெற்றோர், புருஷருடன் வெளியில் சென்று வந்தால் அதில் தோஷமில்லை. ஆனால் ஒரு பெண்ணுக்கு கலியாணமாகுமுன்போ, பின்போ வேறு புருஷரின் ஸ்பரிசம் ஆகாது. அதனால்தான் நம் முன்னோர் தம்மக்களை மிகவும் மரியாதையாகக் காப்பாற்றி ஒரு புருஷன் கையில் ஒப்படைத்தனர். அதே பெற்றோரின் விசேஷித்த கடன். அதை விட்டு அந்நிய நாகரீகத்தைப்பார்த்து நம் பெண்களை வரன் தேடவிடுவதால் அவர்கள் தங்கள் அரும் பூஷணங்களைச் சிறுகச் சிறுக நழுவ விட்டுவிடுவார்களன்றோ. மற்றவகையில் கெட்டுப் போகாவிட்டாலும், மனத்தூய்மையில் மாசு படிந்துவிடுமே. ஆண்மகனின் குணத்தை அவர்களறிவதெங்ஙனம். சிறிது நாட்கள் பழகினதும் அவனையே காதலிக்கத் தொடங்கிவிடுகிறார்கள். நெருப்பையும் பஞ்சையும் ஒரு இடத்தில் வைத்தல்போல் வயசு வந்த ஒரு ஆணையும், பெண்ணையும் ஒருமித்துப்பழக விடுவதால் பெரும் அபாயமல்லால் வேறு நன்மை என்ன. தெய்வாதீனமாக அதுவே விதியாகி அவன் விவாகஞ் செய்து கொண்டால் பாதகமில்லை. இல்லாவிடில் அப்பெண்ணின் கதியாதாவது. அவளை மணக்கப் பின் வேறு ஆர் விரும்புவார். "அரைக்காசுக்கு அழிந்த மானம் ஆயிரம் பொன் கொடுத்தாலும் மீண்டும் வருமா? இப்படியான பழிகள் ஏதும் நேர்ந்து விடாமல் காப்பதற்கே நம்மவர் பெற்றோர்வரன்தேடும் வழக்கத்தைக் கொண்டனர்.

* * *

பூனமரத்தின் நன்மையறிந்து இனி நாம் ஊர் போன காலமாவது செய்ய முற்படுவோம். ஊரிலிருப்பவர் இவற்றை யோசித்து தொடங்கினால் நன்மையாகும்.

* * *

தெய்வபக்தி நாளடைவில் சிலரிடம் குன்றிப் போகத் தலைப்பட்டதால் நம் மூதாதையர் பயந்து தம் பெண்மக்களைக் காத்துவரத் தலைப்பட்டனர். ஒழுக்கங் கெட்ட ஆண்களாலேயே பெண்களை வீட்டிலேயே இருத்தி தகப்பன்தமையன் முதலிய ஆண்மக்கள் அவர்களைப் போஷித்து வரத் தொடங்கினர். ஒழுக்கங் குறைந்த ஆண்மக்களை துஷ்ட மிருகங்களைப்போல் பயந்து விலக்கினர். உலக அனுபவமற்ற சிறுமிகட்கு அவற்றை ஆராயச் சக்தி போதாதென அவர்கள் எண்ணுவது சகஜம்தானே. அதனாலேயே பெற்றோர்தாமே ஓர் ஒழுக்கமானவனைத்தேடி மணம் புரிந்து வைத்து அதையே நாளடைவில் வழக்கமாகவும் கொண்டுவந்துவிட்டனர். இவ்வளவு அருமையாகப் பெற்று வளர்க்கும் பெற்றோர் தம் மக்களுக்குத் தீங்கைத் தேடுவரோ?

தம்சாதி சமய அனுஷ்டானங்களைக் கைவிட்டு அயல் நாகரீகத்தைப் புகுத்துபவர் இருதோணியிலும் கால்வைத்து கரையேற வழி தெரியாமல் திகைப்பவனைப் போல் திகைக்க வேண்டியதே.

தெய்வபக்தி அதாவது கடவுள் எங்கும் இருக்கிறார் நாம் செய்வ தெல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு இருக்கிறார் என்ற எண்ணம் வேண்டும். அதுவே நம்மைச் சீரிய பாதையில் செல்ல வழிகாட்டும்.

ஆதிகாலத்தில்யாவரும் தெய்வபக்தி நிறைந்து, பெரியோர், பெற்றோர் சொற்றவழி நடந்து வந்ததாக வாசிக்கிறோம். பெண்களும் தாங்கள் விரும்பிய ஒரே வரனைப் பெற்றோரின் அனுமதியுடன் மணமுடித்துப் பதிவிரதா சிரோன்மணிகளாக வாழ்ந்தார்கள். ஆனால் அவர்கள் வேறு ஆடவருடன் பழகித் திரிந்ததாகவோ கூடித் திரிந்து அவர்கள் குண நடைகளைச் சோதித்தோ மணமுடித்ததாக நாம் வாசிக்கவில்லை. ஒருத்தி ஒரு ஆண்மகனின் அழகை மட்டும் மெச்சாமல் வீரப்பிரதாபத்தையோ, பக்திப் பெருக்கையோ,

தைரியத்தையோ மெச்சி அவன் மேல் காதல் கொள்வாள். அந்தக் காதலுக்கு ஏதும் இடையூறு நேருங்கால் தன் பிராணனை விட்டுவிடுவாளன்றி வேறு மணம் செய்து உலகில் வாழ இச்சை கொள்ளாள் என்று வாசித்திருக்கிறோமல்லாது, ஒருவனுடன் பழகிப்பார்த்துப் பிடிக்கவில்லை யென்று அவனை விட்டு வேறொன்று செய்வதாக நாம் அறியோம்.

இன்னும் தற்காலத்தில் பெற்றோர் தம் பெண்களுக்குத் தெரியாமல் மணம் பேசி வருவதும், ஏதோ நம் மூதாதையரின் ஆழ்ந்த யோசனையாகத்தான் இருக்க வேண்டும் என்பதே எமது கருத்து. ஒரு பெண்ணுக்குப் பல இடங்களிலும சடங்கு பேசித்தானே ஒன்று பொருந்துவது வழக்கமென்று முன்பு சொன்னோம். அப்படியே முதல் ஒரு இடத்திலிருந்து சடங்கு பேசி வரும்போது பெண்ணறிவாளாகில் உடனே அவள் அவன்தான் தனக்கு நாயகனாய் வரப் போகிறவனென்று மனதில் பதித்து விடுவாளல்லவா? பின் அது சரிப்படாமல் மாறுபட்டுவிடின் வேறு பேச நேரிடும். அப்போ இது எல்லாம் அறிந்திருக்கும் பெண்ணின் மனம் என்னவாய்தான் கலக்கமுறுதிருக்கும். நிச்சயமான பின் சொல்லலாமென்றாலோ தற்காலத்தில் தாலி கட்டும் வரையும் சடங்கை நிச்சயமென்று எண்ணுவது அசம்பாவிதமாயிருக்கிறது. ஆதலால் சடங்கு பேசுவதும் பெண்ணுக்குத் தெரிவதால் வீண் மனக் கலக்கமல்லால் வரும் நன்மைதானென்ன?

பண்டைக்காலத்துக் கற்பரசிகள் பலருக்குப் பெற்றோரே மணம் பேசி முடித்துவைத்ததாகவும், சில பெண்களுக்கு ஆடவர் வில் முதலிய ஆயுதங்களால் தம் கெட்டித்தனத்தைக் காண்பித்து அதனால் மாலை சூட்டப் பெற்றதாகவும் அறிகிறோம். சாவித்திரிக்குச் சடங்கு பேசும்போது சத்தியவானின் பெற்றோரே சாவித்திரியின் பெற்றோரை பெண் கேட்டு அனுப்பினர்களாம். சத்தியவான் சகல அம்சங்களிலும் சாவித்திரிக்கு ஏற்றவனாயிருந்ததால் தகப்பனார் உடனே சம்மதம் கொடுத்து விட்டாராம். அதை அறிந்த சாவித்திரி அவனே தனக்கு மணாளனென மனதால் வரித்துவிட்டாளாம். அதன் பின் நாரதர் வந்து அவனுக்கு ஆயுள் மிகச் சொற்பமென்றும், கலியாணமாகி ஒரு வருஷத்தால் இறந்து விடுவானென்றும், அவனது பெற்றோரும் நாடு நகரிழந்து கபோதிகளாகி காட்டில் கஷ்டப்படுவார்களென்றும் சொல்லிச் சென்றாராம். அதன் பின் சாவித்திரியின் தந்தை சாவித்திரியை மணமுடித்துக் கொடுக்கத் தயங்கினதும் அவை எல்லாம் அறிந்த சாவித்திரி தந்தை வாக்குக் கொடுத்த அன்றே தான் சத்தியவானின் மனைவியாய் விட்டதாகவும், தான் இனி அவனை விட வேறு ஒருவரை மணக்கச் சம்மதிக்க மாட்டாளெனப் பிடிவாதஞ் செய்து தகப்பனைச் சம்மதிக்கப்பண்ணினதாகவும் வாசிக்கிறோம். சாவித்திரி மணமுடிந்ததும் தகப்பனிடம் விடைபெற்றுக் கொண்டு தன் புருஷனுடன் அவனது பெற்றோர் வசித்து வந்த காட்டுக்கே சென்று அவனைப் போல் அவர்களுக்குப் பணிவிடை செய்து வந்ததும், ஒரு வருஷமும் கழிய சத்தியவான் இறந்ததும், தன் பதிவிரதா தர்மத்தால் யம ராஜனையே கண்ணால் கண்ட சாவித்திரி அவனுடன் கூடவே சென்று வாதாடி, ஈற்றில் தன் மாமன், மாமி இழந்த நாடு நகரையும், கண்களையும், தன் புருஷன் உயிரையுமே வரமாக பெற்றதும் யாவும் அறிகிறோம்.

தற்காலத்தில் எவராவது பெற்றோர் அப்புடிச் சடங்கு செய்து கொடுக்க இசைவார்களா? அப்படித்தான் செய்து விட்டபோதிலும் செல்வமாக வளர்க்கப்பட்ட தங்கள் பெண்ணை ஒன்று மற்றவனுடன் கூட்டி அனுப்புவார்களா? பழைய காலத்தவர் தெய்வ பக்தி நிறைந்தவர்; எல்லாம் விதி வசமென எண்ணி மனதைத் தேற்றிக் கொள்பவர். தற்காலத்திலெனிலோ, என பிள்ளையை கவனமாய் பார்க்கவில்லை யென்று மருமகனிட்டம் சண்டைக்குப் போய்விடுவார்களல்லவா?

பெண்களும் சாவித்திரியைப்போல் எல்லாவற்றையும் அடையப் பெற்று, தன் கௌரீ பூஜையாலும், வைசாக்கியத்தாலும் இறந்துபோன தன் கணவனுயிரையே மீட்டுக்கொள்வரோ? ஆதிகாலத்தவரைப்போல் நாமும் சுயம்வரம் நடத்திக் கொள்ளுகிறோம் என்று கூச்சலிடும் நம்மவர் ஆதிகாலத்தவரைப்போல் இப்படியானவற்றையல்லவோ பின்பற்ற வேண்டும்.

இன்னும் நளாயினிக்கு ஏற்ற புருஷன் மாமுனி அல்லவென அறிந்தும் அவளின் விருப்பத்தை அறியாமல் மணமுடித்துக் கொடுத்தனர் பெற்றோர். அவளும் தன் விதிப் பயனென எண்ணி தன் புருஷனுக்கெற்ற பணிவிடைகளைத் தவறாது செய்து, சூரியனையும் தடுக்கும் ஆற்றல் படைத்து மகா பதிவிரதை எனப் பெயரெடுக்கவில்லையா? அப்படியே நம் மூதாதையர் கேவலம் சிற்றின்பத்தை ஒரு சுகமெனமதியாமல், பேரின்பத்தையே அரிய பேறாக மதித்து தமக்கும் தம் பத்தாமாநாக்கும் என்றும் அழியாப் புகழை நிலைநிறுத்திச் சென்றனர். பெண்களின் உதவியின்றேல் ஆண்கள் பெரும் புகழடைந்திருக்க முடியுமா? தற்காலத்தவர் முழுதுமே நம் முன்னோரைப்போல் செய்ய இயலாவிடினும் அக்கற்பரசிகளின் சரித்திரங்களை வாசித்துத் தம்மக்களுக்கு நாளாந்தக்கதைகளாகச் சொல்லிவந்தால் சிறிதேனும் அவர்கள் மனதில் பதிய இடமுண்டு. அதனால் அந்நியநாகரீகம் நம்மை விட்டொழியும்.

சீதனப்பேயால் சீரழிந்த குடும்பம்.

(இ. வே.)

வாசுதேவருக்கு அரசாங்கத்தாரால் "முதலியார்" பட்டம் கொடுக்கப்பட்டதல்ல; இருந்தும் அவ்வூரிலுள்ளோர் அவரை, "வாசுதேவ முதலியார்" என்றே அழைப்பார்கள். அவர் அறிவிற் சிறந்தவர். நாவன்மையுடையவர். அவருக்கு விவாக காலம் வந்தபொழுது, அவர் சீதனம் பெற்றுப் பெண்ணைக் கொள்ளவில்லை. அவர் தனது சொந்தத்திற்குள்ளேயே, சகல சுகுணங்களும் பொருந்திய ஓர் கன்னிகையை விவாகம் செய்துகொண்டார். "நன்மை, தின்மை, கஷ்டம், சுகம்- இன்பம், துன்பம், சகலத்திலும் பங்கு பற்றக்கூடியவள் மனைவிதான்" என்று தனது நாயகிமேல் அன்பு பாராட்டி வந்தார். அவர்களிருவரின் அன்பின் பயனாக, அவர்களுக்கோர் தவக்குலமணிபோன்ற ஆண் குழந்தை உதித்தான். அவ்விளந்தளிருக்கு, "ரத்னகுமார்" என்று நாமகரணம் சூட்டினார்கள்.

ரத்னகுமாரனுக்கு வயசு ஒன்பது இருக்கும். தமிழ்ப்பாடசாலையில் மூன்றாம் வகுப்பில் வாசிக்கிறான். அவனுடைய தாயார் இலகுதியம்மாளுடைய மூத்த சகோதரன் "ரகுநாதபிள்ளை" குடும்பசமேதராய் அடுத்த வீட்டில் வசிக்கிறார். அவர் சிறிது ஏழை என்றுதான் கூறவேண்டும். அவருக்கு அழகேயுருவெடுத்துப் பிறந்தாற்போல ஓர் பெண் குழந்தையுண்டு. குழந்தையின் பெயர் "ருஜேஸ்வரி." அவளுக்கு வயசு ஐந்துவரையிலிருக்கும். தமிழ்ப்பாடசாலைக்குப்போய்வர ஆரம்பித்துவிட்டாள். ரத்னகுமாரனும், ருஜேஸ்வரியும் ஒருமித்தே பாடசாலைக்குப்போய் வருவதும், விளையாடுவதுமுண்டு. பெற்றோர், உற்றார், "நீ யாரையெடா கலியாணம் செய்து கொள்ளுவா" யென்று கேட்டால், "நான் ருஜத்தையே கட்டிக் கொள்ளுவேன்"—என்று ரத்னகுமாரன் விடை பளிப்பான். ருஜேஸ்வரியை நோக்கி," ருஜம்! நீ அத்தானைக் கட்டிக்கொள்ளுகிறாயா?" என்று கேட்டால், "நான் அத்தானைக் கப்போடு கட்டிப் போட்டு நல்ல அடி அடிப்பேன்" என்று கூறுவாள். பெற்றோர் கேட்டுச் சிரித்து ஆனந்திப்பார்கள்.

ரத்னகுமார் மூன்றாம் வகுப்பிற் சித்தியடைந்ததும், வாசுதேவமுதலியார் தமிழ்ப்பாடசாலையினின்று நிற்பாட்டி ஆங்கிலம் கற்க வைத்தார். அவன் ஒவ்வோர் வகுப்பிலும் முதற்றரமாகச் சோதனைகளிற் சித்தியடைந்து, சீனியர், லண்டன் மெற்றிகுலேஷன் முதலிய பரீட்சைகளில் விசேஷ சித்தியடைந்ததும், இங்கிலாந்துக்கனுப்பிப் பட்டப் பரீட்சைகளுக்குப் படிக்க அரசாங்கத்தாரால் தேர்ந்தெடுத்தனுப்பப்பட்டான்.

ரகுநாதபிள்ளை, தான் ஏழையாயிருந்த போதிலும், தனது மகள் ருஜேஸ்வரியை, தமிழ் நான்காம் வகுப்பிற் சித்தியடைந்ததும் ஆங்கிலம் கற்கவைத்தார். ரத்னகுமார் இங்கிலாந்துக்குப் போகும்பொழுது அவள் மூன்றாம் பாரத்தில் வாசிக்கிறாள். ரகுநாதபிள்ளை பார்த்தார்; மருமகன் சீமைக்குப் படிக்கப்போய்விட்டான். பெரும் பட்டங்களுடன் திரும்பிவந்து உயர்ந்த உத்தியோகம் வகிக்கப்போகிறான், அதற்குத் தகுந்தாற்போலத் தனது மகளைச் சகல கலைகளிலும் சிறிது வித்துவத்தன்மையடைவிக்க வேண்டுமென்று, ருஜேஸ்வரியைச் சங்கீதமும் கற்கவைத்தார். அவளும் அதிசிரத்தையோடு படிக்கலானாள். அவள் ஜூனியர் வகுப்பிற்கு வந்ததும், ரகுநாதபிள்ளையால் பாடசாலைச் செலவுகள் செலுத்த முடியாதிருந்தும், சிறிதும்தயங்காது, தனது காணியை ஈடுவைத்து மேலும் படிப்பிக்கலானார். அவள் ஜூனியர் வகுப்பிற் சித்தியடைந்ததும், ஆங்கிலப் படிப்பை நிறுத்திவிட்டு அவளுடைய முழுக்கவனத்தையும் சங்கீதத்திலேயே செலுத்தும்படியான ஏற்பாடுகள் செய்யலானார். அந்த நாளையில் வேதாரண்யம் சங்கீத வித்வான் சம்புகேஸ்வரக் குருக்கள் நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கணித்தாக ஓர் வீட்டில் வாசம் செய்தார். ரகுநாதபிள்ளை தனது மகள் ருஜேஸ்வரி சங்கீதத்தில் நல்ல வித்துவத் தன்மையடைய வேண்டுமென்ற அவாவின் பயனாக, சம்புகேஸ்வரக் குருக்களை, மாசம் ரூபா 30 வேதனம் பேசி அவளுக்கு பாடம் கற்பிக்க ஏற்படுத்தினார்.

நல்லூரில் "சங்கீதசபை" என்று ஓர் சங்கம் உண்டு. அதில் ருஜேஸ்வரியும் ஓர் அங்கத்தினளாகச் சேர்ந்தாள். சிறிது நாட்களுக்கெல்லாம் அவள் சபாவிற்கு "காரியதரிசி" ஸ்தானத்தை வகிக்கலானாள். அந்த வருடத்தில் சென்னை பட்டணத்தில் சங்கீதமஹா சபை ஒன்று கூடிற்று. அதற்கு பல ஊர்களிலிருந்தும் சங்கீத வித்வசிரோன்மணிகளெல்லாம் வந்திருந்தார்கள்; யாழ்ப்பாணத்திலிருந்து, நல்லூர் சங்கீத சங்கத்தின் சார்பாக ருஜேஸ்வரி விஜயம் செய்தாள். அங்கே கூடியிருந்த சகலரும் பரவசப் படும்படியாக அவள் தனது வித்துவத்தன்மையைக் காட்டி, பல பரிசுகளும், பெரியோர்களால், "சங்கீதவித்

வனி" என்ற பட்டப் பெயரும் வழங்கப் பெற்று பெரும் புகழோடும், கீர்த்தியோடும் யாழ்ப்பாணம் திரும்பினாள்.

ரத்னகுமாரன் சீமைக்குப் போய்ச் சட்டப் பரீட்சைகளுக்குப் படித்து, பாரிஸ்டர் பட்டமும் பெற்றுவிட்டான். தான் இன்னும் ஓர் மாசத்திற்குள் ஊர் வந்து சேர்ந்து விடுவதாக வாசுதேவ முதலியாருக்குக் கடிதமும் வந்துவிட்டது. ரத்னகுமார் வருகிறானென்று, வாசுதேவ முதலியார், திலகவதியம்மாள், ரகுநாதபிள்ளை, ருஜேஸ்வரி, அவள் தாயார் சகலரும் ஆனந்தக் கடலில் நீந்துகிறார்கள்.

ரத்னகுமார் யாழ்ப்பாணம் வந்து நியாயவாதத் தொழிலை ஆரம்பித்து விட்டான். அவனுடைய பேச்சுவன்மையும், புத்திசாதுர்யமாய் நியாயங்களை எடுத்து விளக்கும் திண்மையும், அவன் பெயரை இலங்கை முழுவதும் பரவச் செய்தது. இஃது இப்படியிருக்கவே, பணம் படைத்தோர் பலரும் தங்கள் பெண் பிள்ளைகளுக்கு ரத்னகுமாரைக் கலியாணம் பேசி வந்தார்கள். முதலில், என்னமோ ரத்னகுமாருக்கு ருஜேஸ்வரியையே யல்லாது வேறொருவரையும் செய்வதில்லை யென்று முதலியார் சாக்குச் சொன்னார். இருந்தும், கொழும்பில் "நித்யானந்த வங்கி" மானேஜர் கனகரூயபிள்ளை தனது மகளுக்கு ரூபா 50,000/- சீதனம் கொடுப்பதாகச் சொல்லி, ரத்னகுமாருக்கும் தனது மகளுக்கும் கலியாணம் பேசி வரும்படி ஆட்களைத் தூது அனுப்பினார். ரூபா 50,000 என்ற தொகையைக் கேட்டதுதானே, திலகவதியம்மாளுக்கு வந்து விட்டது பேராசை. அதை எப்படியும் விடக்கூடாதென்றுய்விட்டது. "இந்த விவாகத்தை முற்றெறிந்துச் செய்து போடவேண்டும். ஏன் ஐம்பதினாயிரத்தைவிடுவான்" என்று பிடிவாதம் செய்தாள். ருஜேஸ்வரிக்கு வேறெங்காவது ஓர் நல்ல வரனைத் தேடிக் கட்டி வைக்கலாமென்று மேலும் கூறினாள் திலகவதியம்மையார். வாசு தேவ முதலியாரும், "சரிதான்" என்று வாயைப் பிளந்துவிட்டார். ரத்னகுமாரனும் தான் உழைக்கும் உழைப்போடு இந்த ஐம்பதினாயிரத்தையும் சேர்த்தால் பெரிய முதலாகுமென்று விவாகத்துக்குச் சம்மதித்துவிட்டான்.

கலியாணப் பேச்சு மும்மரமாக நடக்கிறது. முகூர்த்தமும் வைத்தாய் விட்டது. ரகுநாத பிள்ளை, முதலிலிருந்தே எல்லாவற்றையும் கவனித்துத்தான் வந்தார். ஆனால் அவர் என்ன செய்வார் பரம ஏழை. தனித்திருக்கும்போதெல்லாம் பழையதையும் நினைத்துக் கண்ணீர் விடுவார். உண்ண உறக்கமின்றி மெலிந்து வாடுகிறார். "எனது அத்தான் என்னை மறந்துவிட்டாரா!" என்று ருஜேஸ்வரி தன்னைத்தானே கேட்டுப் பெருமூச்சு விடுவாள். 'ருஜம்! என்று என்னைக் கூப்பிட்ட அவர் பொன் வாய் இப்போ யாரை அழைக்கப் போகிறது" என்று கண்ணீர் விடுவாள். உண்ணப்போலுல் அவளால் உண்ணமுடிவதில்லை. படுக்கைக்குப் போலுல் அவளுக்குப் படுக்கை கொள்ளாது. அவள் மன்து சமுத்திர அலைபோல் தத்தளிக்கிறது. அவள் தாயார் நிலைமையோ சொல்ல முடியாது.

கலியாண முகூர்த்த நாளும் வந்துவிட்டது. மாப்பிள்ளை வீட்டில் பந்தல் சோடினைகளெல்லாம் மிகவும் அலங்காரமாக விருக்கிறது. மேள வாத்தியம் முழங்குகிறது. பெண் வீட்டாரும் மாப்பிள்ளையை அழைத்துப்போக வந்துவிட்டார்கள். மாப்பிள்ளையும் பெண் வீடு போய்ச் சகல சடங்குகளும் முடிந்து, பெண்ணும் மாப்பிள்ளையும் திரும்ப வீடு வந்து சேர்ந்துவிட்டார்கள். இச்சடங்குக்கு ரகுநாத பிள்ளையை யாரும் அழைக்கவில்லை.

அடுத்தநாட் காலமே, ரகுநாதபிள்ளையும் மனைவியாரும் படுக்கையை விட்டெழுந்தார்கள். அவர்களுக்கு ஒரே மனக்கவலை. "பிள்ளை என்ன செய்கிறாள்" என்று கொண்டு ருஜேஸ்வரி படுத்திருக்கும் அறைக்குப்போய்ப் பார்த்தார்கள். அங்கே ராஜேஸ்வரியைப் படுக்கையில் காணவில்லை. "எழுந்து வெளியே போயிருப்பாளென்று வாளாவிருந்தார்கள். வெகு நேரமாகியும் அவள் வீட்டிற்கு வரவில்லை. உடனே தேடிக் கூப்பிட்டார்கள். ஒரு குறியும் தென்படவில்லை. "எங்கள் குலக்கொழுந்து எங்குபோயிற்றோ, என்ன நேர்ந்ததோ" என்று பரிதவிக்கலானார்கள். ஒரு பலனும் ஏற்படவில்லை. அன்று முழுதும் தேடியலைந்தார்கள். அடுத்த நாளும் தேடியலைந்தார்கள். ஒரு தகவலும் கிடைக்கவில்லை. மூன்றும் நாட் காலமே ரகுநாத பிள்ளையும் மனைவியாரும், வீட்டுவாசலில் உட்கார்ந்து கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்போ ஒருவன் ஓடி வந்து, "ஐயா! உங்கள் குழந்தை செம்மணிச் சுடலைக் கிணற்றில் பிரேதமாகக் கிடக்கிறது" என்றதுதான் தாமதம். "என் செல்வமே, ஐயோ! இந்தப்பாவி வயிற்றிலா நீ வந்து பிறக்க வேண்டும்!" என்று பிரலாபித்து எங்கி வீழ்ந்தாள் ருஜேஸ்வரியின் தாயானவள். அதே எக்கம் அவளை இயமலோகத்திற்கு உடனேயே அனுப்பி விட்டது. ரகுநாதபிள்ளை, தனது மகளின் மரணத்தைக் கேட்டதுதானே துள்ளிக்குதித்து, "அடடட.....என் கண்ணே!" என்று ஓரே பிரலாபிப்பாகப் பிரலாபித்துக் கொண்டு தெருவிற்கு ஓடினார். இதற்கிடையில் அயல் ஜனங்க

லெல்லாம் கூடி ரூஜேஸ்வரி யிறந்து கிடக்கும் இடத்திற்குப் போனார்கள். வாசுதேவ முதலி யார் வீட்டாரும் கேள்விப் பட்டவுடன் பரதவித் தார்கள். ரத்னகுமார் கேள்விப்பட்டதும் திடுக் கிட்டான். உடனே குதித்தெழுந்து, "ஐயோ என் ரூஜம்!" என்று பிரலாபித்துக் கொண்டு எல் லோருக்கும் முன்னுகவே ஓடலானுன். அங்கே ரூஜேஸ்வரியை கிணற்றிற்கு வெளிப்ய தூக்கிவளத் திபிருந்தது. பக்கத்திலே ஓர் கடிதத்துண்டு கிடந் தது. அதில், "நான் தற்கொலை புரிந்து கொள்கி றேன். எனக்காக ஒருவரும் கவலைப்பட வேண் டாம். இப்படிக்கு, ரூஜேஸ்வரி" என்று எழுதப் பட்டிருந்தது.

இவை யெல்லாவற்றையும் கண்டதுதான் தாம தம் ரத்னகுமார். ஆ! இந்தப் பண ஆசையல்லவா, இந்தச் சீதனத்திற்கு ஆசைப்பட்டல்லவா நான் உன்னை விட்டுவிட்டு வேறு பெண்ணை விவாகம் செய்ய உடன்பட்டேன். ஐயோ, என்னை மன் னிக்க மாட்டாயா? ரூஜம்! நீ உயிர் துறந்த பின் நான் உயிர்தரியேன். ரூஜம்! ரூஜம்! என்று ஒரே போக்காக உளறி, அதோ ரூஜம் வருகி ருள். ரூஜம்! ஓடி வா. நீ இம்மட்டும் எங்கு போயிருந்தாய். ரூஜம்! நான் உனக்கு இனிப்பு வாங்கி வைத்திருக்கிறேன். சொக்லேற் வாங்கி வைத்திருக்கிறேன்....." என்றிப்படியா கப் பிதற்ற ஆரம்பித்துவிட்டான். அவனுக்குப் பயித்தியம் பிடித்துவிட்டது. இவை யெல்லாம் பார்த்தார் வாசுதேவ முதலியார். "ஆ! சீதனத் தின் கொடுமையே!" என்று பெருமூச்சுவிட்டார். "இனி என்ன செய்யலாம்; எல்லாம் மிஞ்சிவிட் டது. ரகுநாதபிள்ளை அறிவிழந்து கிடக்கிறார். அவருக்கு எவ்வளவு சிகிச்சை செய்தும் அறிவு வரவில்லை. நீங்கள் அவரைக் கவனியுங் கள். இந்தக் கதையை வேறு யாராவது எழுதி "வழிகாட்டி"க்கனுப்புங்கள். சீதனம் அறவே ஒழியட்டும்," என்றூர் பக்கத்தில் நின்ற சந்திர சேகர உடையார்.

* வெற்றி யாருடையது? *

முற்றேடர்.

அவர்கள் சென்றபின், நானும் ஒரு செம்பு ஜல தைத மடமடவென்று என் வயிற்றெரிச்சல் தீரக் குடித்துவிட்டு, சமையக்காரனையும் சாப் பிடச் சொல்லிவிட்டு, மறுபடியும் படுத்துவிட் டேன். ஏதும் வாசிக்கலாமென்றாலோ ஒன்றி லும் புலன் செல்லவில்லை. இரண்டு வரிவாசித் தால் பின் யோசனை வந்துவிடும். இப்படியே யோசித்து யோசித்துத் தலைவலி எடுத்ததல்லால் வேறென்றும் தோன்ற வில்லை. மணியும் கழிந்து நாலும் அடித்துவிட்டது. இனி யாரும் சினேகிதர் சந்திக்க வந்தாலும் வருவார் களே; நான் இப்படி இருந்தால் என்ன சொல் வார்கள்; நாங்கள் இருந்த ஒற்றுமைக்கு இரண்டு நாட்களாய் படும் வேதனை, ஈசனே, நினைக்கவும் பயமாயிருக்கிறது. வெய்யிலில் திரிந்தவர்க்கல் லவோ நிழலினருமை தெரியும். நிதமும் நிழலி ருந்த எனக்கு இந்த அகோர வெய்யில் காட் டுத் தீபோல் பற்றி எரியத் தொடங்கியதில் ஆச் சரியமென்ன?

ஈசா! இதுவும் உன் சோதனையா! என எண்ணி என்விதியை நொந்துகொண்டு, வேண்டாவெறுப் புடன் முகத்தைக் கழுவித் தலையை வாரிமுடிந்து, வெளியே வந்தேன். இதற்கிடையில் மத்தியா னம் அவன் வைத்த கறி சரியில்லையே! இரவுக் காவது அவர் சாப்பிட வந்தால் ஏதும் நல்லாய் வைத்திருக்கவேண்டுமே என்ற எண்ணம் வந்த தினால் குசினிப் பக்கம் போனேன். அங்கு ஒன் றுமே இல்லை. எல்லாம் கழுவிக் கவிழ்த்துவைக் கப்பட்டிருந்தது. "என்னடா ஐயா சாப்பிட வரு வாரே; இன்னும் ஒன்றும் ஆகவில்லையே; இன்றைக் குச் சுறுக்கா வந்தாலும் வருவார்; கொஞ்சம் கெ திப்பண்ணடா", என்று அவனையும் அவசரப்படு த்தி, நானும் சேர்ந்து ஆறு மணிக்கிடையில் சமை யல் முடித்துவிட்டோம். முடிந்தபின் பிள்ளைக ளைக்கூட்டிப்போய் முகம், கை, கால் சுத்திசெய்து, கொஞ்சநேரம் சுவாமியை ஸ்தோத்திரம் பண்ணி விட்டு, கொண்டு வந்து அவர்களுக்குச் சாப்பாடு கொடுத்தேன். வழமை போல் அவர்கள் சாப்பிட்டு முடிந்ததும் கொஞ்ச நேரம் படித்தார்கள். படித்து முடிந்ததும், அவ ர்கள் நித்திரைக்குப் போய் விட்டார்கள். அவர் கள் விழித்திருக்கும்போது எனக்குக் கவலை அவ்வளவாகத் தோற்றவில்லை அவர்கள் நித் திரையானதும் மறுபடியும் என் கவலை மடை திறந்த வெள்ளம் போல் கரை புரண்டோடத் தொடங்கியது. அந்தச் சுவாமி படத்துக்கு முன்னாலேயே போய் நின்று மறுபடியும் என் கவலை தீர அழுதேன்.

மணி எட்டாய், ஒன்பதாய், பத்தாய், பதினொ ன்றும் அடித்துவிட்டது. இன்னும் அவர் வரக் காணோம். சாப்பாட்டை எடுத்து உள் மேசை யில் வைத்து மூடி சமையற்காரனையும் சாப்பி

பிடச் சொல்லி, கதவெல்லாம் தாழ்ப்பாள் போட்டுவிட்டு, வந்து படுத்துவிட்டேன். நித்திரை யோ வரவில்லை. என்ன உலகம்! பெண்ணுப்பிறந்து அதிகம் தெரிந்ததென்று காட்டிக்கொண்டதற்காகவா, இவ்வளவு தண்டனை. ஊராருக்கு நன்மை செய்ய எண்ணி எனக்கே தீங்கை வருவித்துக்கொண்டேனே. ஈசா! நீதான் அவருக்கு சுயபுத்தியைக்கொடுக்கவேண்டும்! என்று வேண்டிக்கொண்டு ஒரு சிறு அரவம் கேட்டாலும் எழும்பி எழும்பிப்பார்த்து அவ்விரவைப் போக்கினேன். மறுநாளும் விடிந்துவிட்டது. இன்னும் வரக்காணோம். நெஞ்சில் பெரியபாரம் விழுந்துவிட்டது போல் இருந்தும் என்ன செய்வது; பிள்ளைகளுக்கு ஆகவேண்டியது பார்க்கவேண்டும்தானே. இதற்கிடையில் அவர்களும் ஐயா எங்கே என்று என்னைத் தொந்தரவு செய்கிறார்கள். என்னசொல்வேன்! ஐயா அதிகாலையில் எழும்பி வேலைக்குப் போய்விட்டார்" என்று ஒரு வகையாய் அவர்களை சமதானப்படுத்திப் பள்ளிக்கூடம் அனுப்பினேன். அனுப்பின பின்னும் என் மனம் அந்தரித்தபடிதான். ஒருநாளும் வராமல் இருக்காதவர் ராத்திரி வரவில்லையே! என்ன அபாயமோ! ஈசா நீதான் காப்பாற்றவேண்டுமென்று வேண்டியபடி காத்திருந்தேன்.

துக்கம் ஒரு புறம், பசிவாதை மறு புறமாகத் தலை சுற்றுகிறது. முதல் நாளிரா அவருக்கென மூடிவைத்த சோற்றில் தண்ணீரை ஊற்றிப்பிசைந்து இரண்டு வாய் குடித்துவிட்டு, மற்றதெல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு போகும்படி, கறுப்பையனிடம் சொல்லி, மறுபடியும் போய் படுத்துவிட்டேன். அதிகம் ஏன்! முதல் நாள் நடந்தது போலவே மறுநாளும் நடந்து, மணியும் ஒன்பதாய்விட்டது. நானும் காத்திருக்காமல் எல்லாம் பூட்டிப் படுத்துவிட்டேன். ஆள் வரும் காலடிச் சத்தம் கேட்டது. மெல்லப் போய் எட்டிப்பார்த்து விட்டுக் கதவையும் தாழ்பாளை விலக்கிவிட்டு வந்து படுத்துவிட்டேன். உள்ளுக்கு வந்த என் நாதர் சமயற்காரனைக் கூப்பிட்டுச் சாப்பாடு எடுக்கச் சொல்லிச் சாப்பிட்டார். சாப்பிட்டபின் அம்மாவையும் கூப்பிட்டுச் சாப்பிடச் சொல்லு என்று சொல்லிவிட்டுப போய் படுத்துவிட்டார்.

நானும் கோபமொருபுறம், பயமொருபுறம், பாதிக்க ஒன்றும் பேசாமல் போய்ச் சாப்பிட்டுவிட்டு வந்து படுத்தேன். இரண்டு நாளாகச்சாப்பிடாமலிருந்து சாப்பிட்டது போலும்; படுத்ததுதான் தெரியும்; விடியத்தான் கண் விழித்தேன். வழமைபோல் நான் வீட்டுக் கருமம் பார்த்து பிள்ளைகளைப் பள்ளிக்கூடம் அனுப்பினேன். என் நாதரும் சமயற்காரனிடமே சாப்பாடு எடுக்கச் சொல்லிச் சாப்பிட்டு விட்டுப்போனர். என் மனமும் கல்லாய்ப் போய் விட்டதினால், என் வேலைகளை எந்நாளும்போல் செய்யலானேன்.

பன்னிரண்டு மணிக்குப் பிள்ளைகளும் வந்தார்கள். தகப்பனின் கோபமான முகத்தைப்பார்த்ததோ என்னவோ அவரைப் பற்றி ஏதும் கேட்பதையே விட்டு விட்டார்கள்.

பகல் மூன்று மணி போல் கமலாவின், மகள் என்வீட்டிற்கு வந்தாள். இந்த நாலு நாளும், என் மனக் கலக்கத்தினால் அவளை அடியோடு மறந்துவிட்டேன். அவள் குழந்தையைக் கண்டதும், "இங்கேவா, அம்மா என்ன செய்கிறு; ஏன் மூன்று நாளாக இந்தப்பக்கம் வரவில்லை" என்று கேட்டேன். "அம்மா வயிற்றுவலி, என்று படுத்திருக்கிறு; உங்களுக்கு கூடச் சொல்லச் சொன்னு; நான் மறந்துவிட்டேன்" என்று சொல்லி விளையாட ஓடிவிட்டாள்.

ஐயோ பாவம்! எவ்வளவு அன்னியோன்னியமாய் இருந்தவளுக்கு, சுக மில்லாத நேரத்தில் ஒத்தாசை செய்ய முடியவில்லையே! என்று என் மனம் மிகவும் அந்தரித்தது. போனால், "நான் தான் போக வேண்டாமென்றேனே, ஏன் போனுய்" என்று என் பிராணபதி கேட்டால், என்ன பதில் சொல்லுவேன். என்னேரம் சென்றாலும், வந்தபின் கேட்டுத்தான் போகவேண்டும் என்று என்னி மனத் துடிப்புடன் காத்திருந்தேன்.

அன்று இரவும் 9-மணிபோல் வீடு வந்தார். சமையற்காரனைக் கூப்பிட்டுச் சாப்பாடு எடுக்கச் சொன்னர். நானே பருமாறப் போனேன். சாப்பிட்டு முடியும் தருணம் பார்த்து "கமலாவுக்கு மூன்று நாளாகச் சுகமில்லையாம்; இன்றக்கு மகளிடம் சொல்லி அனுப்பினுள்; போய் பார்த்துவிட்டு வாட்டா" என்று கேட்டேன்.

"ஆர் உன்னைப் போகவேண்டாமென்றது" என்று சொல்லி எழுந்து போய்விட்டார். நானும் இந்தச் சொல்லுடனாவது நாளைக்கு போய்ப்பார்த்து விட்டு வருவோம் என்று அன்றிரவையும் போக்கினேன். விடிந்ததும் வழமைபோல் ஆக வேண்டிய கருமம் பார்த்து பிள்ளைகளும் தகப்பனும் வெளிக்கிட்டபின் ஆவலுடன் கமலாவைப் பார்க்க ஓடினேன். அவள் படுக்கையிலிருந்தாள். என்ன கமலா எப்போ தொடக்கம் உனக்கு சுகவீனம். எனக்கும் மூன்று நாளாய் தலையிடி அதனால் வெளிக்கிடவில்லை என்று சொல்லிக்கொண்டே உட்கார்ந்தேன்.

கமலா: எனக்கு அன்று உங்கள் வீட்டிலிருந்து வந்த நாள் தொடக்கம் கொஞ்சம் வயிற்று வலியிருந்தது. மூன்று மாசம் ஒரு மாதிரியிருப்

பதாக முன் சொல்லியிருக்கிறேனே. அதுதான் என்னவோ ஏதோ என்று பயந்து தாதி ஒருத்தியை வரவழைத்துப் பார்த்தோம். அவள் "அது ஒன்றுமிருக்காது; பெலவீனந்தான்; கொஞ்ச நாளைக்கு உடம்பை அலட்டிக்கொள்ளாமல், படுக்கையிலிருந்தால் எல்லாம் சரிப்பட்டு விடும்" என்று சொல்லிப் பெலனுக்கென ஒரு மருந்துச் சொல்லி விட்டுப் போய் விட்டாள். அதிருக்கட்டும்; என் புருஷன்தான் வீட்டிலேயே தங்காமல் வெளியில் ஊராருக்கு மாரடித்துத் திரிகிறார். இப்போ இரண்டு மூன்று நாட்களாக உன் புருஷனும் வீட்டுக்கு வருவதில்லை என்று, குழந்தைகள் சொன்னார்கள் நிசந்தானே?

நான்: ஓம் அது மெய்தான். ஏதோ உத்தியோகசாலையில் வேலை அதிகமென்று, இரவு ஒன்பது பத்துமணிபோல்தான் வீட்டுக்கு வருகிறார்.

கமலா: அப்படித்தான் நானும் நினைத்தேன். ஒருநாளும் தவறாது நேரத்துடன் வருபவர், இப்படி நிற்பதால் ஏதோ வேலை கடினமாய்த்தானிருக்கும்.

"அதுசரி ஆண்மக்கள கஷ்டம் அவர்களுக்கல்லவோ தெரியும். நாங்கள் சுகமனுபவிக்கப் பிறந்தவர்கள். அது அப்படியிருக்க:—உனது விருத்தாந்தத்தைச் சொல்லி நடுவில் நிறுத்தி விட்டாய். மிகுதியைக் கேட்க எவ்வளவோ ஆவலாயிருந்தும், அதை இப்போ கிளறுவதும் நல்லதல்ல; இன்னொருநாளைக்கு வருகிறேன். இதற்கிடையில் ஏதும் தேவையானால் சொல்லியனுப்பு, ஒன்றுக்கும் யோசியாதே" என்று சொல்லிக் கொஞ்சநேரம் இருந்துவிட்டு நான் வீடுவந்து சேர்ந்தேன்.

பின் நிதமும் போய் அவளைப் பார்த்து வருவேன். சத்தியினாலும் ஒன்றும் சாப்பிடாததினாலும் வரவர துரும்பு போலாய்விட்டாள். இதற்கிடையில் அவள் புருஷன் பெலனுக்கும், சாப்பாட்டுக்குமாக, விதவிதமான, மருந்து வகைகளும், ஆகார வகைகளும், கொடுத்து வந்தது கணக்கிலடங்கா.

ஒருநாள் நான்போனபோது ஒரு மருந்து போத்தலை கொண்டு வந்து அதை வாசித்துச் சொல்லச் சொன்னாள்.

நானும் வஞ்சகமில்லாமல் அதன் உண்மைப் பெயரைச் சொல்லிவிட்டேன். ஐயோ உடனே அவளுக்கு வந்த கோபத்தைப் பார்க்கவேண்டுமே. அந்தப் போத்தலை எடுத்து முற்றத்தில் வீசி எறிந்து தோடு அது கலக்கிக் குடிக்கும் ஏதனத்தையும் வீசி எறிந்தாள். சுத்த சைவக்காரியாகிய எனக்கு, முட்டையைக் கொடுத்துக் கெடுத்ததும் போதாமல், கோழிச் சூப்பு வேறே வேண்டுமா? மரக்கரிச் சூப்பு என்று சொன்னதை மெய்யன்றல்லவோ நம்பி நான் குடித்து விட்டேன். அந்த மணத்திலிருந்து அப்பவே நான் சந்தேகித்தேன். என் புருஷன் இதற்காகப் பொய்யும் சொல்லுவாரோ, என்று நம்பியல்லவா குடித்துவிட்டேன். இப்படி பெலன் தேடுவதிலும் பார்க்க இறந்து விடுவது நல்லதே என்று இன்னும் ஏதேதோ வாயில் வந்ததெல்லாம் பிதற்றினாள்.

திப்பிரமையடைந்து ஒன்றும் பேசாமல் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த நான், என்ன கமலா, உனக்கு பைத்தியம் பிடித்துவிட்டதா? என்ன சைவக்காரராயிருந்தாலும் இந்த ஊர் வந்தவர்கள் இதெல்லாம் பார்க்கிறார்களா? உன் புருஷன் நஞ்சைக் கொடுத்தாலும் நீ வாங்கிக் குடிக்கக் கடமைப் பட்டவளாயிற்றே! அப்படியிருக்க, இப்படி யெல்லாம் துள்ளுகிறாயே; இது அவர் காதில் பட்டால் என்ன சொல்லுவாரோ என்றேன். என்ன சொல்லுவாரோ; இன்றைக்கு வரட்டும் ஒரு முடிவாக்குகிறேன். இப்படி யெல்லாம் எனக்குப் பொய்ச் சொல்லிக் கொடுத்து என்ன செய்யப் போகிறரென்று பார்ப்போம். வரட்டும்! வரட்டும்! என்று மிகவும் ஆத்திரத்துடன் பேசிக்கொண்டிருக்கிறாள். நான் சொல்வதொன்றுமே அவள் காதில் விழுவதாகக் காணவில்லை.

என்ன செய்வது; வீட்டில்தான் ஆறுதலில்லை யென்று வந்த இடத்திலுமா இப்படி நடக்க வேண்டும்! இதை ஏன் நான் இவளுக்குச் சொன்னேன்! எனக்கு வாசிக்கத் தெரியாதென்று ஒரு சொல்லில் சொல்லியிருக்கலாகாதா! தெய்வமே! இது என் பிராண நாயகர் காதில் பட்டால் இன்னும் என்ன அனர்த்தம் விளையுமோ? என்று பயந்தவளாய், கமலா! என்ன இது; இனிமேல் இங்கே வரவேண்டாமென்றுதான் இப்படி எல்லாம் சொல்லுகிறாயா? உன் புருஷனுக்கு இது நான்தான் சொன்னது என்று தெரிந்தால் அவர் என்னதான் நினைப்பார். அதற்கும் மேலாய் என் புருஷன் காதில் பட்டால் ஐயோ என்ன நேரிடுமோ தெரியவில்லையே. "அதிகப் பிரசங்கி! நீ இனி அவ்வீடம் போகவே கூடாது" என்று உத்தரவிட்டாரானால் எங்கள் நட்பு என்ன ஆவது. கமலா! கமலா! வேண்டாம்! உன் ஆத்திரத்தை அடக்கு! பெண்களுக்கு இவ்வளவு அடாது! ஒரு சொல்லில் எனக்கு அதுவேண்டாமென்றால் அவர் விட்டு விடுகிறார். வீணாக மனஸ்தாபத்தை விலைக்கு வாங்கிக் கொள்ளாதே என்று என்னாலான மட்டும் சொல்லி வீடு வந்து சேர்ந்தேன்.

வீடு வந்து சேர்ந்ததும் மனமோ ஒரு நிலையில்லை. "ஸ்ரீனிவாஸ அவர்களுக்குள் மனஸ்தாபத்தை உண்டாக்கி விட்டேனே பாவி! நான் அங்கு போகாதிருந்தால் எவ்வளவு நன்மையாயிருக்கும். பாவம் அந்த மனுஷன் இத்தனை வேலையுடன் இன்னும் அவளின் உபத்திரவத்தையும் எப்படிச் சகிப்பாரோ" என ஒருக்கால் அனுதாபப்பட்டும், "பின், என் அவர் அப்படிச் சைவக்காரி என்று தெரிந்தும் பொய் சொல்லிக் கொடுக்கவேண்டும்; மரக்கறி வகையில் எத்தனை தேக புஷ்டிக்கு உரியது இல்லையோ? அதொன்றும் யோசிக்காமற் செய்தவர் அனுபவிக்கட்டும்" என மறுமுறை எனக்கு நானே சமாதானம் சொல்லிக் கொண்டும், அன்று முழுதையும் போக்கினேன். எனது நாதரும் வழமைபோல் 9 மணிக்கு வருவதும், விடிய வேலைக்குப் போவதுமாகவே கடத்திவந்தார். நானும் இரண்டு மூன்று நாட்களாகக் கமலாவின் வீட்டுகுப் போவதையே விட்டுவிட்டேன். பழையபடி பத்திரிகைகளுடனும் புராணங்கள், இதிகாசங்கள் முதலிய புஸ்தகங்களுடனும் காலத்தைக் கழித்துவந்தேன்.

மூன்று நாட்களால் கமலா என் வீட்டுக்கு வந்தாள். "என்ன அக்கா! என்மேல் கோபமோ? என்முற்கோபத்தால் அன்று ஏதும்சொல்லியிருந்தாலும் அதை நீங்கள் மன்னிக்காமல் வேறுயார் மன்னிக்கப்போகிறார்கள். எனக்கு இந்த அன்னிய ஊரில் உங்களை விட யாரிருக்கிறார்கள்" என்று சொல்லியழுதாள். எனக்கும் அவளைப் பார்த்ததும் மனமிரங்கிவிட்டது. நான் அதற்காக விடவில்லை. எனக்கும் உடம்பு இப்போ கொஞ்ச நாட்களாய் சரியாயில்லை. இல்லாவிடில் அதற்காகவும் நான் வராமல் விடுவேனே.' இப்போ உனக்கு உடம்பு எப்படி? என்று அவளைச் சமதானப்படுத்தி கதையை மாற்றினேன்;

கமலா: எனக்கு இப்போ உடம்பு நல்லாய்த்தான் வருகிறது. அந்த சூப்புத்தாலை விழுந்து உடைந்து விட்டதென்றும், எனக்கு அது ஒத்துப்போகவில்லையென்றும் என் நாதரிடம் பக்குவமாகச் சொல்லிவிட்டேன். இப்போ துவரம் பருப்பு, கத்தரிப் பிஞ்சு, வெண்டிப் பிஞ்சு, உருளைக் கிழங்கு எல்லாம் போட்டு மரக்கறியில் சூப் மாதிரி சரிக்கட்டிக் குடித்து வருகிறேன். மூன்று நாளாக வருவீர்களென்று பார்த்தும் காணுதலினால் ஏதோ கோபந்தானுக்கும் என்று நானே வெளிவந்தேன். என் மிகுதிச் சரித்திரம் கேட்க ஆவலுற்றீர்களோ அதை இப்போ சொல்லட்டுமா?

—கனகம்.

(தொடரும்)

-: பெண்கள் நிலைமை :-

ஒரு தேசத்தின் நிலைமை அத்தேசத்து பெண்கள் நிலையை ஒத்திருக்கிறது.

ஆதி காலத்தில் நமது தாய் நாட்டுப் பெண்கள் அதி உன்னத நிலையில் இருந்ததனால்தான் அக்காலத்தில் அத்தேசம் அதிசிறப்புடன் விளங்கிற்று.

அவர்கள் கல்வி அறிவுடனும் சமத்துவத்துடனும், சுதந்திரத்துடனும், இன்பமான வாழ்வு வாழ்ந்து வந்தனர். தற்காலத்துப் பெண்கள் கல்வியறிவின்றி, மனவுறுதி யற்று, ஊக்கமுன்றி அடிமைகள்போல அதிக கஷ்டப்படுகின்றனர். அவர்கள் பெரும்பாலும் தேகதிடமற்றவர்களாய் இருக்கின்றார்கள்.

கல்வி அறிவும், தேகதிடமுமே சந்தோஷத்தையும், உற்சாகத்தையும், சுறுசுறுப்பையும் தரவல்லது. கல்வி அறிவு இருந்தால்தான் ஆடவர்களுக்கு எவ்வழியிலும் உற்றதுணையாக இருந்து உதவிபுரியலாம்.

"இல்லாள் அகத்திருக்க
இல்லாத தொன்றில்லை"

என்றபடி நற்குண நற்செய்கை உடைய மனையாள் வீட்டில் இருப்பாளாயின் அவ்வீட்டில் எல்லா விதமான பாக்கியங்களும் நிரவியிருக்கும். ஒரு வீடு சிறப்புற்று விளங்குவதும் பெண்ணினாலன்றே! அப்படியே ஒரு தேசமும் நற்குண நற்செய்கைகளையுடைய பெண்கள் இருந்தாலன்றே அது சிறப்புடன் விளங்கும். உதாரணமாக அநேக பல்லாண்டுகட்குமுன் நடந்த ஒரு கதையை இங்கு எழுதத்துணிந்தேன்.

அநேக வருஷங்களுக்குமுன் இலங்கா புரியில் அழகே உருவெடுத்தாற்போல் பதமினி என்னும் மாது சிரோன்மணி பிறந்தாள். அவள் அழகின் புகழ் இந்தியா முழுவதும் பரவியது. அவள் அழகினுக்கேற்றுப் போல் குணவதியாகவும், புத்திசாலியாகவும் இருந்தாள் என்பதற்கு ஐயமில்லை.

அவள் மீவார் தேசத்து அரசனை பீம்சிங்குக்கு மனைவியாளை. மணம் முடித்து இலங்கையை விட்டு மீவாருக்குச் சென்றவள், பின்பு தனது ஜனனபூமிக்குத் திரும்பிவரவே இல்லை

அவள் சிறுபெண்ணாக இருந்தபோழுது, அவளது தாயார், உத்தம பத்தினி மாரின் திவ்விய சரித்திரங்களை அவளுக்கு அடிக்கடி சொல்லுவதுண்டு. அவைகளைக் கேட்கும் பொழுது பதுமினிக்கு ஒருவிதமான வீரமும் தைரியமும் தோன்றும். அவள் இந்தியாவுக்கு சென்றதும் அதிக ஐக்கியமாக தனது பத்தாவுடன் வாழ்ந்து வந்தாள்.

இப்படி இருக்கும் ஒரு நாளில், டில்லியின் அரசனை அல்லாவுத்தீன் தனது அரண்மனையில் உட்கார்ந்தவனுய் சதா பதுமினியின் அழகையே எண்ணி, எண்ணி ஏங்கினன். அழகிற் சிறந்த மனைவிமார்கள் பன்னிரண்டுபேர் அவனுக்கு இருந்தும், அவனைச்சந்தோஷிப்பிக்க அவர்களால் கூடாமல் போயிற்று. அவர்கள் தங்களால் கூடியமட்டும் முயன்று பார்த்தார்கள். அவனுடைய முகம் சந்தோஷத்தினால் ஒரு நிமிடமாவது பிரகாசித்ததில்லை. எப்பொழுதும் கடு கடுத்த முகத்தினனுய் விளங்கினன்.

ஆ! பதுமினியின் அழகுடன் ஒத்திட்டுப் பார்த்தால் இவர்களுடைய அழகு எந்த மூலைக்கு?— அதிசீக்கிரத்தில் மீவாரை முற்றுகையிட்டான். பதுமினியை கொடுத்துத் தீரவேண்டுமென்று சொல்லியும் பார்த்தான். அவன் ஜம்பம் பலிக்கவில்லை. "ஆ! அவள் மட்டும் கொடுக்கப் பட்டால் மீவாரை முற்றுகையிடேன்" என்று கதறினன். ஆனால் கேட்பார்யார்? எதோ பைத்தியம் உளருகிறதென்று ராஜபுத்திர வீரர்கள் நகைத்தார்கள். அதற்கிசைவதிலும் தாங்கள் யுத்தகளத்தில் மடிய சித்தமானார்கள்.

மீவாரைச் சுற்றிலும் ஐம்பது கற்கோட்டைகள் இருந்தன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு மலைபோல் பட்டாணித் துருக்கரின் சேனை வெள்ளத்தைத் தடுத்து நின்றது.

இருதிறத்தாருக்கும் போர் அதி மும்முரமாக நடந்தது. யுத்தத்தில் மடிந்தவர்க்கோர் எல்லையில்லை.

இக்காலங்களில் பதுமினி தன் தோழிமார்களுடன் சந்தோஷமாகவேயிருந்தாள். அத்தோழிகளெல்லாரும் ராஜபுத்திர உயர் குலத்துப் பெண்கள். மத சம்பந்தமான புஸ்தகங்களை அவள் அவர்களுடன் படிப்பதுண்டு. சில சமயங்களில் அரண்மனையை அடுத்த ஏரிக் கரையில் யோய் உலாவுவதுண்டு. அவளது அழகிய உருவமே அதில் பிரதி பிம்பித்திருக்கும்.

ஒருநாள் இவள் உப்பரிகைமீது நின்று நாலா பக்கங்களிலும் சுற்றிப் பார்த்தாள். மீவாரின் கோட்டை மதில்மீது ராஜ புத்திர வீரர்கள் மரணத்துக்கு அஞ்சாமல் போர் புரிவதையும், அனேகம்பேர் தங்கள் தங்கட்டிகளுடன் மடிந்து கிடப்பதையும் கண்டாள்.

ஆ கடவுளே! என்னுலல்லவா அந்தக் கஷ்டம் நேர்ந்தது என்று சொல்லி கண்ணீர் விடுவாள்.

இதற்கிடையில் பதுமினியின் அழகை நிலக் கண்ணுடியின் மூலமாகவேனும் கண்டால் உடனே யுத்தம் நிற்கும் என்று அறிவித்தான். அல்லாவுத்தீனின் வேண்டுகோளுக்கு ராஜபுத்திர வீரர்கள் சம்மதித்தார்கள். அவளது அழகைக் கண்ணுடியில் கண்டு களிக்க வந்தான் என்றல் அவனது பேதமையை என்னென்றுரைப்பது?

பகை அரசனுய் இருப்பினும் ராஜபுத்திரருடைய சத்தியவாக்கை நம்பி ஒருவித மெய்க்காவலுமின்றியே அரண்மனைக்கு வந்தான். ஓர் அழகிய அறைக்கு பீம்சிங் அவனை அழைத்துச் சென்றான். அவன்முன் ஒரு நிலைக்கண்ணுடி ஒன்றிருந்தது. ஆ! ஒன்று...இரண்டு...மூன்று விளுடிகள் ஆனதும்—அத்திரைகள் விலகியதும் பதுமினியின் அதி அற்புத அழகின் தோற்றம் அவன் கண்ணெதிரில் நின்றது. அவனதை நன்றாக உற்று நோக்குவதற்குள் மீண்டும் அத்திரை மூடப்பட்டது. "என்? இனிப் போகலாமா" என்றான் ராஜன். பாவம்! அல்லாவுத்தீனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பேசாமல் மரியாதையாக ராஜாவைப் பின் பற்றி நடந்தான். தங்கள் வாக்கை நம்பிவந்த வேந்தனை பீம்சிங் கூடவேசென்று வழியனுப்பினான். இது ராஜபுத்திரரின் இயற்கையான நற்குணம். அந்தோ! அங்கே மறைவாக நின்ற அப்பாவியின் சேனையில் சிலர், அங்குதோன்றிய பீம்சிங்கனைச் சிறைசெய்தனர். அல்லாவுத்தீன் மெய்க்காவல் பெற்று அதி கம்பீரமாய்ச் சென்றான். அடகடவுளே! நம்பிக்கை துரோகம் செய்த இவ்வனியாயப் பாவிக்கு கெம்பீரமுண்டா?

ராஜன் சிறை செய்யப்பட்டான் என்ற செய்தியைக் கேட்ட பதுமினியும், மீவார் ஜனங்களும் தீயில் விழுந்த புழுவெனத் துடித்தனர்.

பதுமினி தன் மாமன் மாலனையும், மருமகன் கோரசிம்மனையும் வரவழைத்து ஆலோசனை செய்தாள்.

கொஞ்சக்காலத்துக்குப் பிறகெல்லாம் ராணி அறிவித்தாள். "மீவாரை முற்றுகை யிட்டிருக்கும் உனது சேனையை அழைத்துக்கொள்; அதன் பின்பே பதுமினி அங்கு வருவாள்," என்பதாக.

தனது தகாத எண்ணத்திற்கு அவள் இசைந்து விட்டதாக எண்ணி மனம் பூரித்தான் அத்துருக்கன். அவன் இதயம் அளவற்ற சந்தோஷத்தினால் அடிக்கடி பலமாக அடித்தது.

"அவள் தனது மரபுக்குரிய காவல் பூண்டு அரசிற்குரிய ஆடம்பரத்துடன் வருகையில், அவளது நாணத்தையும் கூச்சத்தையும் குலைக்கக் கூடாது" என்பன போன்ற மனக்கோட்டைகள்

கட்டியவாறே 'கஞ்சி வரதப்பா எனில் எங்கு வருகிறதப்பா' என்றேங்கும் ஏழையைப்போல் அண்ணாந்து நின்ற அல்லாவுத்தீன் அதிக சந்தோஷ சாகரத்தில் ஆழ்ந்து நீந்திக்கரையேற வழி தெரியாமல் தத்தளித்து மலைத்து நின்றான்.

மீவாரிலிருந்து எழுநூறு மூடு பல்லக்குகள் கிளம்பின. ஆனால் அவைகளிலொன்றிலேனும் ஒரு மாது கூட இல்லை. இராஜ புத்திர சேனையில் வல்லமையிலும் தீரத்திலும் மிகச் சிறந்த எழுநூறு வீரர்கள் அப்பல்லக்குகளில் ஆயுதபாணிகளாய் ஏறிக்கொண்டனர். ஒவ்வொரு பல்லக்கையும் அறுவர் தூக்கிச்சென்றனர். உண்மையில் அவர்கள் பல்லக்கு தூக்கிகளல்லர். அவர்களும் ராஜ புத்திரவீர்களே! ஒவ்வொருவனிடமும் கூரிய வாளும் வேலும் இருந்தன. பதுமினி போகவேயில்லை. பதுமினியும் அவளது தோழிமார்களும் இருப்பதாக யாவரும் நம்பினர்கள்.

"ஆ! அக்கினி கூண்டில் அகப்பட்டுக் கொண்டது; இனித் தப்பவழியில்லை. நான் கைவைத்த காரியம் கைகூடாது போமா?" என்று தன்னேத்தானே மெச்சினான் அல்லாவுத்தீன்.

மகமதியரின் கோட்டை தடித்த சுவற்றினை உடையது. அதற்கு வெளியே நமது பல்லக்குகள் இருந்தன. அலுவசிய தாமதத்தை வினவ, பதுமினி தனது காதலனிடமிருந்து தனது கடைசி விடையைப் பெற்றுக்கொள்ள அனுமதி தரவேண்டுமாய்க்கேட்டுக் கொள்ளவிரும்புவதாக ராஜ புத்திர வீரர் சொல்லினர்.

அல்லாவுத்தீன் அதற்கிணங்க, பதுமினி உள்ளே இருப்பதாக நம்பப்பட்ட ஒரு மூடு பல்லக்கானது பீமசிம்மன் சிறை வைக்கப்பட்டுள்ள அறைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. மற்றவை அவனெதிரில் மூடியவண்ணமிருந்தன. அரை மணி நேரத்துக்குள் பதுமினி வந்துவிட வேண்டுமென்று அல்லாவுத்தீன் கட்டளையிட்டான். ஆனால் பத்து.....இருபது.....முப்பது..... நிமிடங்கள் சென்றன. பதுமினி வருவதைக் காணோம். அல்லாவுத்தீனுக்கோ கோபம் வர ஆரம்பித்தது. சென்ற முப்பது நிமிடங்களும் அவனுக்கு முப்பதினாயிரம் வருடங்களாகத் தோன்றின. இதற்குள் "பீமனுக்கு என் விடுதலே" எனவும் எண்ணினான். உண்மையாகக் கூறுமிடத்து ஒரு பித்துப் பிடித்தவன் மாதிரிக் காணப்பட்டான் அல்லாவுத்தீன். அவன் அண்ணாந்து பார்க்கையில் பல போர் வீரர்கள் வாளும், ஈட்டியும் தாங்கிச் சிவிகையிலிருந்து கிளம்பினர். போகிகள் போல் வேடம் பூண்டு வந்த சூரர்கள் வேல், கம்புடன் வெளிப்பட்டனர். அபபொழுதுதான் ஆசை நீங்கி அதிர்ச்சி கண்டு நடுங்கினான். "ஆ! பீமன் போய்விட்டான்; பதுமினி வரவேயில்லை!! நாம் மோசம் போனோம்" என்ற தொனிகள் கிளம்பின. "ஆம்! கடைசியில் நான் ஏமாற்றப்பட்டேன்" என்று கோபத்துடன் கர்ஜித்துக் கொண்டே எழுந்து நின்று "எனது வீரர்களே! அவர்களை விடவேண்டாம்; பூசண வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ளுங்கள் என்று கூவினான். உடனே பட்டாணியருக்கும் ராஜபுத்திரருக்கும் பெரும் போர் மூண்டது. இரு திறத்தாரும் வெற்றி கிடைத்தால் கிடைக்கட்டும்! மரணம் வரினும் வரட்டும்!! என்று சண்டை செய்தனர். இதற்குள் பீமன் தனது நாட்டிற்குச் சென்றுவிட்டான். அவனைப் பின்தொடர்ந்த அல்லாவுத்தீனுக்கும், அவனது சேனைகளுக்கும் ராஜபுத்திர வீரர்களுக்கும் பெரும்போர் மூண்டது. எங்கும் குருதிப்பிரவாகம் ஆற்று வெள்ளம்போல் ஓடிற்று. ஆயிரக் கணக்கான ராஜபுத்திர சிகாமணிகள் தங்களது ராணிக்காக உயிர் துறந்தனர். பீமசிம்மனும் அவர்களுடன் மடிந்தான். தங்களது ராஜன் மடிந்தான் என்றதைக் கண்ணுற்ற அவனது சேனைகளும் பின்வாங்கினர். அப்பொழுது பதுமினி தன் தோழிகளுடன் உயர்ந்த உப்பரிகை மீது நின்று அக்கொடும்போரைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அல்லாவுத்தீனின் சேனையின் ஜெயக் குறல் கேட்டபொழுது அவள் சற்றும் தடுமாற்றமின்றி தன்னைச் சுற்றி நின்ற தோழிமாரை அன்புடன் பார்த்து, 'நாம் அவமானப்படுவதிலும் மறிக்கிறதே நலம்" என்று சொல்லி பெரியதோர் அக்கினிக் குண்டம் வளர்ப்பித்துத் தன்னை அர்ப்பணம் செய்தாள். இதனைப் பார்த்த சேடியரும் ஒருவர் பின் ஒருவராக அவளைப் பின் தொடர்ந்தனர். என்னே! இம்மாதரசியின் கற்பின் தூய்மையும், பதிபக்தியும்.

பண்டைக்காலத்து மாது ரத்தினங்களைப் புகழ்ந்து வாளாவிருத்தல் கூடாது. நாமும் அவற்றை அனுசரித்து அதன் வழி ஒழுக முயற்சிப்போமாக. அவர்களின் உன்னத நிலையை நினைத்துத் தற்காலத்துப் பெண்மணிகளாகிய நாம் பெருமையுறுவது போலவே, தற்காலத்துப் பெண்களின் நிலைமையைக் குறித்து எதிர்காலத்தார் பெருமை பாராட்டத் தக்கவண்ணம் நடக்கப் பிரயாசப்படவேண்டும்.

ஸரோஜா.

: : : இல்லறம் : : :

(கணவன்—மனைவி.)

கணவனும் மனைவியுமாகிய இருவரும், கலியாணப் பந்தலில், ஓமாக்கினி முன்பாக, தேவர்கள் சாட்சியாகவும், வேதப் பிராமணர் சாட்சியாகவும், வாழ்விலும், தாழ்விலும், சுகத்திலும் துக்கத்திலும், மரணம் நம்மைப் பிரிக்கும் வரைக்கும், ஒருவரை ஒருவர் ஆதரித்துக் கனப்படுத்தி உள்ளன்போடு இல்லறம் நடத்துவோமென்று, வாக்குப் பண்ணியபடியே அன்னியோன்னிய தம்பதிகளாய் வாழ்ந்திருந்தவர்கள் அனேகர். ஆனால் தற்காலத்திலோ அவ்விதம் இருப்பவர்கள் மிகச் சிலரே. இக்காலத்தில் அநேகர் கலியாணமாகி ஒரு மாதமாவதற்குள் கீரியும் பாம்பும் போலாகி விடுகின்றனர். இதற்கெல்லாம் காரணம் தற்காலக் கல்வி முறையே? கணவனும் மனைவியுமாயிருந்து அறநெறி வழுவாது ஒழுகலே இல்லறமாம். இதன் சிறப்பை "இல்லறமல்லது நல்லறமன்று" என்னும் ஔவைப் பிராட்டியார் திருவாக்கால் நன்குணரலாம். இரண்டு கண்களும் கூடியே ஒரு பொருளைப் பார்ப்பதுபோல் கணவனும் மனைவியும் பரஸ்பரம் அன்பும் ஒற்றுமையும் உடையவர்களாய், இல்லிற்குரிய காரியங்களை நடத்த வேண்டும். அஃதின்றி மாறுபட்ட மனமுடையவர்களாகில் அவ்வில்லறம் மிக்க துன்பத்தையே விளைவிக்கும். நீலே தவறின எப்பொருளும் இழிவடையுமன்றே.

(2) கணவன்மார் கஷ்டப்பட்டுப் பொருள் சம்பாதிக்க வேண்டியவர்கள்; வீட்டிற்கு வெளியே சென்று நடத்த வேண்டிய எல்லாக் காரியங்களையும் செய்ய வேண்டியது அவர்கள் கடமையே. மனைவிமார் வருவாய்க்குத் தக்கபடி செட்டாகச் செலவு செய்து குடும்பத்தை நடத்த வேண்டியவர்கள். அவர்களே இல்லற நெறிக்குப் பெரும் பொருப்பாளராய் இருக்கின்றனர். இல்லாள், இல்லவள், குடும்பினி, வாழ்க்கைத்துணைவி முதலிய சிறப்புப் பெயர்கள் பெண்களுக்கு அமைந்திருத்தலே ஆராயின் மனைவியர்களுக்கே குடும்ப நிர்வாகத்தில் பொறுப்பிருக்கிறதாய் இனிது விளங்குகிறது. ஆகையால் மனைவிமார் பொறுமை, அடக்கம், அன்பு முதலிய பொதுக் குணங்களையும் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் சிறப்புக் குணங்களையும் பெற்றிருத்தல் அவசியம்.

(3) ஒரு பெண்ணானவள் தாய் தந்தையர் சகோதரர் எல்லோரையும் விட்டுத் தனது உடல் பொருள் ஆவி மூன்றையும் தனது நாயகனுக்கு அர்ப்பணஞ் செய்து, அவனையே நம்பிப் போகிறாள். புருஷனுமப்படியே சத்திய வாக்கோடு ஏற்றுக் கொள்ளுகிறான். அவ்வாறே சில காலம் பூவும் மணமும் போல் ஒற்றுமையுடன் இருக்கிறார்கள். சிலர் சிறிது நாட்களில் "ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள்" எனனும் பழமொழிப்படி நாயகி மனம் கலங்கிய வண்ணமிருக்க, பரத்தையர் வசப்பட்டு அவர்களின் திருவடிகளில் மனதைச் செலுத்தினவண்ணமிருக்கிறார்கள். சிலர் மதுபானத்தை அருந்தி விட்டு தங்களின் மனைவியை அடித்து உதைத்துத் துன்புறுத்துகின்றனர். இன்னும் சிலர் வீண் சண்டை சச்சரவுகளில் ஒருவரை ஒருவர் வெறுத்துத் திரிகின்றனர். கேவலம் மிருகத்திற்குச் சமானமான இவர்களின் குணங்களை ஆய்ந்தோய்ந்து பாராமல், தமது அருமைக் குழந்தைகளை விவாகஞ் செய்து கொடுக்கும் பெற்றோரின் மதிதானென்னே! ஒரு பெண்ணானவள் தனது பால்யப் பருவம் போக மற்றக்காலங்களைத் தனது நாயகனுடனேயே கழிக்க வேண்டியவளாய் இருக்கிறாள். அவள் ஓர் நற்குணமுள்ள உத்தமியாயிருந்தும், அவளுக்கு வந்த கணவன் ஓர் துற்குணமுள்ளவனாயிருந்தால் அவர்களின் இல்வாழ்க்கை நல்வாழ்க்கையாக இருக்குமா? ஒருபோதுமிராது. நாயகன் நற்குணமுள்ள உத்தமனாயிருந்தும், அவனின் மனைவி ஓர் துர்குணமுள்ளவளாயிருந்தால் பின் அவர்களின் வாழ்க்கையைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. இவ்வித குடும்பத்தில் ஒற்றுமைக் குறைவும் வீண் சண்டை சச்சரவுகளும் உண்டாவதற்குக் கேட்க வேண்டுமா?

(4) நாற் பெருங் குணங்களையும் ஒருங்கேயமையப் பெற்றுள்ள ஓர் பெண்ணே, இல்லறத்தின் இன்ப மயமாகவும், சிக்கனமாகவும், நேர்மையான வழியிலும் நடத்தும் தன்மை வாய்ந்தவள். அத்தகைய பெண்ணின் மனதிற்கு மாறுக ஓர் துர் நடத்தையும், துர்குணமுமுள்ள ஆடவன் நாயகனாக வருவானாகில் அவர்களின் வாழ்க்கை சிறந்து நடப்பது எங்ஙனம்? (இக்காலத்திற் பெரும்பாலும் பெண்களின் மனதிற்கு மாறான மணங்களே நடைபெறுகின்றன.) மணம் என்பதை பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தர்வம், அசுரம், இராக்கதம், பைசாசம் என எட்டு வகையாகப் பெரியோர் வகுத்துள்ளனர். இவற்றுள் தெய்வ மணமே பெரும்பாலும் வழங்கப்பட்டு வருகிறது. தெய்வ மணமென்பது தந்தையும் தாயுமாக அவள் காதலித்த ஒருவனுக்கு அந்தணர் முதலிய பெரியோர்கள் சாட்சியாக, வேத விதிப்படி கொடுத்தல். ஆனால் இக்காலத்தில் பெரும்பாலும் காதல் மணமொழிந்து, பணத

திற்கும் உத்தியோகத்திற்கும் ஆசைப்பட்ட தெய்வ மணங்களே நிகழ்கின்றன. "காதலிரு வர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன் பம்" என்றபடி காதலின் வழிச் செய்யப்படும் மணமே இன்பமணமாகும். காதல் என்பது ஓர் ஆடவனுக்கும் ஓர் பெண்ணுக்கும் இடையி லுள்ள உழுவ லன்பு காரணமாக உண்டாகும் ஓர் விதப் பற்று. ஆனால் கண்டவர்களை எல்லாம் காதலிப்பதும் பின் மாறுவதுமான அந்த இழி குணமன்று. ஓர் பெண் எப்போது ஓர் ஆட வனைக் காதலித்து அவனே தனக்கு நாயகனென்று மனதில் நிச்சயிக்கிறாளோ, அக்கணமே அவள் அவனுக்குரியவளாகின்றாள். அவ்விதம் ஒருவ னைக் காதலித்துப் பின் வேறு மணஞ் செய்வாளா கில் அவள் வியபிசாரம் அடைந்தவளுக்குச் சமா னமாகின்றாள். அவளுடைய கற்புக்குப் பங்கம் உண்டாகிவிடுகிறது.

(5) ஓர் பெண்ணுக்கு ஒரு நாயகனைத் தேடும் பொழுது தாய் செல்வமுள்ளவனை விரும்புகிறாள், தந்தை கல்வி உத்தியோகம் முதலியவற்றை உடை யோனை விரும்புகிறார், சுற்றத்தார் குல நலனுள்ள ஒருவனையே விரும்புகின்றனர். பெண்ணோ "கை நிறைந்த பொருளினும் கண்நிறைந்த கணவனே நலன்" என்று அழகுங் குணமுமுள்ள ஒருவ னையே விரும்புகின்றாள்.

(6) இவ்வாறாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு எண்ணத்துடன் இருப்பதால், அனேகமாகப்பெண் களின் மனதிற்கு மாறான மணங்களே நடைபெ றுகின்றன. இவ்வித மணங்களினால் உண்டாகும் ஆபத்துகள்பல. ஒருகால் அப்பெண்ணுக்கு விருப்பமில்லாதிருக்குமாகில் அவர்கள் இருவருக் கும் அன்பிராது; அதனால் ஒற்றுமை குறைவு படு கின்றது. ஆதலால் பெண்களுக்கு அவர்களின் சம்மதத்துடனேயே விவாகஞ் செய்யவேண்டும். சிலபேற்றோர் பெண்களுக்கு மணம் பேசும்பொ ழுது அப்பெண்ணுக்கு விளங்காதிருக்கும் பொ ருட்டு இரகசியமாய்ப் பேசி முடித்து விடுகிறார் கள். அப்பெண் தனக்கு விவாகம் பேசுகிறார் களென்று தெரிந்திருந்தும் தனக்கு வரும் நாய கன் யாரென்பதென அறியாமல் இருக்கிறாள். முகூர்த்த தினத்தன்று தாலி கட்டின பின்தான் தன் நாயகன் இன்னனென்பதை அறிகிறாள். அவளின் எண்ணத்திற்கு மாறாயிருக்குமாகில் அவளின் மனம் என்ன பாடுபடும். விவாகமென் பது ஒருநாள் இரண்டு நாட்களுக்கு இருந்து வாழ்வதுடன் முடிந்து போகுமா? அவர்களின் சீவிய காலம் முழுவதும் அவ்விவாகத்திற் கட்டுப் பட்டவர்களாய் இருக்கவேண்டும். "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனுமது" என்னும் ஆன்றோர்வாக்கியப்படி இல் வாழ்க்கையின் குணமும், அதன் பலனுமென்ன வென்றால் கணவனும் மனைவியும் மன ஒற்றுமை யுடன் கூடிச் செய்யும் அறங்களேயாம். அவர்க ளிருவருக்கும் அன்பும் ஒற்றுமையும் இல்லாதிரு க்கில் அவர்களின் இல்லறம் எவ்விதம் நல்லறமா கும். முற்காலத்தில் பெண்களுக்கு அவர்களின் சம்மதத்துடனேயே விவாகம் செய்து வந்ததாகப் பல சரித்திரங்களால் அறிகின்றோம்.

(7) ஆண்களினின்றும் பெண்களே மனதைக் கட்டுப்படுத்தி நல்லவழியில் நடக்கும் திறமைவாய் ந்தவர்கள்; அத்தகைய பெண்களுக்குரிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பென்னும் நாற்குணங்களே யும் வளரச் செய்வதற்கு அத்திபாவசியமான செந்தமிழ்க்கல்வியைப் பெற்றோர் பயிற்றுவித்தல் வேண்டும். செந்தமிழ்க் கல்வி அறிவிற் சிறந்த ஒரு பெண் எப்பொழுதும் நல்ல எண்ணங்களுட னும், நல்லபழக்க ஒழுக்கங்களுடனும் தவக்குத் தந்தை தாயார் வரிக்கும் கணவரின் உத்தமகுணங் களையுமே எதிர் பார்த்திருப்பாள். எனெனில், அவள் தன்கல்விஞானத்தினால் உண்டாகியதல்லறி வினால் இல்வாழ்க்கையானது எப்படிப்பட்டது என்றும், அதை நடத்தும் கணவனும் மனைவியு மாகிய இருவரும் எவ்விதமாகிய குணம் அமைந்த வர்களாய் இருந்தால் அவ்வில்வாழ்க்கையைச் சிறப்புற நடத்தலாமென்றும், அறிந்திருப்பாள். பெண்கள் கல்வி கற்பது உத்தியோகஞ் செய்வ தற்காகவாவது, ஆண்மக்களுடன் தர்க்கிப்பதற்காக வாவது, அல்லது தற்புகழ்ச்சிக்காகவாவது அன் று. இல்லறத்தைச் செம்மையாகவும், சிக்கனமாக வும் நடத்தி, நாயகரின் குறிப்பறிந்து நடந்து அவருக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும், உறுதியையும் அளித்து, தமது குழந்தைகளுக்குக் கல்வியமுதூட்டி, அவர்களை நன்கு பரிபாலித்தற்கே அல்லாது வேறெதற்கு மல்ல.

பெண்கள் கடமையைப் பின்னல் வரும் சிறு சம்பாஷணையால் அறியலாகும்.

மிகவும்கஷ்டதிசையில் இருக்கும்சகோதரிசாவி த்திரி வெகுசந்தோசமாகத் தன் குடும்பத்தை நட த்தி வந்தாள். அவளின் புருஷன் மிகவும் சொற்ப சம்பளம் பெறுபவனாயிருந்தும், சாவித்திரியின் செட்டான சீவியத்தால் அவர்கள் குடும்பம் கடன் முதலிய விக்கினங்களின்றி மிகுந்த திரு ப்திகரமாக நடந்து வருவது கண்டு, அவ்விடத்தி லுள்ளோர் யாவரும் தங்களுக்குள் அதிசயமா கப் பேசிக்கொள்வார்கள். யாவரும் தங்கள் குடும்பத்துள் ஏதும் பிணக்கு வந்தாலும் சாவி த்திரியையே உதாரணமாகக் கூறி அவளைப் போல் தங்கள் மனைவிமாரையும் நடந்துவரும் படி போதிப்பார்கள். ஆதிகாலத்திலிருந்து கற் பரசியின் புனிதமான பெயரைச் சூடியிருந்த விசேஷமோ என்னவோ அவள் யாவராலும் போற்றப்பட்டு மகா புனிதவதியாய் விளங்கி னாள்.

இவையெல்லாம் கவனித்து வந்த அயலிலுள்ள செல்வவதியான சகோதரி "மோகனு" என்பவள் ஒருநாள் சாவித்திரியைச் சந்தித்து, "சகோதரி! உன்னை ஒன்று கேட்க விரும்புகிறேன்; உனக்கு சாவகாசமிருக்குமோ" என்றாள்.

சாவித்திரி;—அதென்ன அப்படி நீங்கள் கேட்க விரும்புவது. எல்லா அஷ்ட ஐஸ்வரியமும் பெற்று லக்ஷ்மியின் கருணையுடன் வாழும் நீங்கள் பரம ஏழையான என்னிடம் கேட்க வேண்டியது என்ன இருக்கிறது. ஏதும் ஏவலிருந்தால் சொல்லுங்கள். இயன்றவரையில் செய்து முடிக்கிறேன்.

மோகனு:— (அவளின் பணிவான ஸ்தோத்திரமான விடைகளைக்கேட்டு மிகவும் சந்தோசித்தவளாய்) வேறொன்றுமல்ல; ஒரு பெண் எவ்வளவு பணக்காரியாயிருந்தும் கற்றவளாயிருந்தும் தன் புருஷனைத் திருப்தி பண்ணி நடத்துவது மிகவும் கஷ்டமாயிருக்கிறது; கண்டபடி கோபிக்கிறார்கள், திட்டுகிறார்கள், நேரத்துக்கு வீட்டுக்கு வராமலே இருந்து விடுகிறார்கள். சில சமையங்களில் அடிக்கவும் தொடங்கி விடுகிறார்கள்; பிறமாதரிடம் இச்சை கொள்ள யோசிக்கிறார்கள்; அதிகமேன்; என் புருஷனையே பார். அவரைத் திருப்தி பண்ண எவ்வளவோபாடுபட்டும் சாத்தியப் படவில்லை. எத்தனை வேலைக் காறரைக்கொண்டு எத்தனை விதமாகச் சமையல் பண்ணிவைத்தாலும் அவருக்கு வீட்டில் சாப்பிடப் பிடிப்பதேயில்லை. சதாவெளியில்தான் அவர் சீவியம். யாதொரு குறைவுமற்று எங்கள் வீடு இருந்தும் இப்படியான மனப்பீடையினால் தரித்திரம் பிடித்த வீடுபோல் இருக்கிறது. அப்படியிருக்க, நீயோ இப்படியான கஷ்டநிலையிலிருந்தும் எப்படி சமாளிக்கிறாய்? உன் புருஷன் உன்மேல் மிக்க அன்புடையவனாய் உன் சொற்தவறாமல் நடந்து வருவதக்கு நியாயமென்ன? நீ அவனை எப்படித்தான் வசப்படுத்துகிறாய்?

ஏதாவது மருந்தின் வல்லமையா? அல்லது மந்திரசக்தியா? என்க்கும்அதைச்சொல்லுவாயா?

சாவித்திரி: அம்மணி நீங்கள் கேட்டகேள்வி எனக்கு மிக்க அதிசயத்தை உண்டுபண்ணுகிறது. நான் இதுவரையும் உங்கள் விஷயத்தில் எவ்வளவோ கௌரவமான எண்ணங் கொண்டிருந்தேன். யாவராலும் புகழக்கூடிய மகா கௌரவம் வாய்ந்த உத்தியோகத்திலிருப்பவரும் லக்ஷாதிபதி என்று சொல்லக்கூடிய நிலைப்பரத்திலிருப்பவருமான பெரும் சீமானையே மணவாளனாக அடையப்பெற்ற உங்கள் பாக்கியமே சிலாக்கியமென எண்ணியிருந்தேன். நீங்களே இவ்விதம் சொல்வது என்னால் நம்பக்கூடியதாய் இல்லை. மருந்தும் மந்திரமும் என்றீர்களே. அது தாசி வேசிகளுடைய தொழிலல்லவா? தங்கள் நாயகருக்கு மருந்தும் மந்திரமும் தேடும் பெண்கள், மீளா நரகத்துக்கே ஆளாவார்கள். நோயும் தரித்திரமும் அவர்களைப் பீடிக்கும். மருந்து மருந்தென்று கண்ட பாஷாணங்களையே கலந்து கொடுப்பதால் அது புருஷனின் உயிருக்கே ஆபத்தாக முடியுமன்றே. இவ்விதம் கேவலமான உபாயங்களால் நாயகரை வசப்படுத்த எண்ணும் நாரியர் கேவலமான நாய்களிலும் தாழ்ந்தவராகவன்றே மதிக்கப்படுவர்.

மோகனு: அப்படியொன்றுமில்லாமலிருந்தும்,உன் கணவன் உன்மேல் மாறாத அன்புடனும் அதிக விசுவாசத்துடனும் நடந்து கொள்வதற்குக் காரணமென்ன? என் புருஷன் இப்படித் திரிவதன் நியாயமென்னவென நினைக்கிறாய்.

சாவித்திரி: அம்மா என் கணவர் என்னிடம் அன்பாயிருப்பதற்குக் காரணம் நான் என் கணவரைச் சாமான்ய புருஷனென எண்ணாமல் தெய்வமாகவே நினைத்திருக்கிறேன். மனிவிக்குத் தன் கணவன் சொல்லை மீறி நடவாதிருத்தலே சிறந்த தவமும், தேவ பூசையுமென்று வேத விதியிருப்பதால் நான் அதையே முக்கியமாகக் கொண்டிருக்கிறேன். நான் இவ்வாறு, எல்லாம் அவரேயென நினைத்துத் திரிகரண சுத்தியாய், மெய்யன்போடு அவருக்கு வேண்டியவற்றைக் குறைவறச் செய்து வருகின்றமையால், அவரும் என்னிடம் மாறாத விஸ்வாசம் வைத்து அன்னிய ஸ்திரீகளை நாடாமல் இருக்கிறார். ஒரு வேளை அவர் பிற மாதரை இச்சித்தாலும் நான் அவருக்குச் சகாயமாயிருந்து வருவேன்.

மோகனு: என்ன சாவித்திரி அது கூட மனமொத்துச் செய்வாயா? என்னதான் பிறவியில் பொறுமைக் குணமிருப்பினும் தன் புருஷன் அன்னிய ஸ்திரீயை நாட யார்தான் பார்த்திருப்பார்கள். அது என்னால் முடியாத காரியம்.

சாவித்திரி: அப்படியல்ல! அம்மா ஒருவர் குற்றம் செய்தால் அதற்கு வேறொருவர் தண்டனை விதித்தால் அத்துடன் அது மறக்கப்பட்டு விடுமல்லவா? ஆனால் அவர் குற்றம் புரிந்தும் அதைத் தண்டிக்க வேண்டியவர் தண்டிக்காமல் மேன்மேலும் அன்பாய் நடத்திவந்தால் அவர் மனச்சாட்சியே அவரைக் கண்டிக்க ஆரம்பிக்கும். மனுஷர் கண்டிப்பது ஒரு நேரத்துடன் தீர்ந்து போய் விடுமல்லவா? ஆனால் மனச்சாட்சியின் தண்டனையோ மகா பயங்கரமானது. அவர் எங்கு சென்றாலும் என்ன செய்தாலும் கூடவே சென்று, அவர் தனக்கு விரோதமான தீச்செயல் அகற்றும்வரையும் கண்டித்தபடியே யிருக்கும். ஆதலால் நாம் நமது மனதை அடக்கி பூர்வீக கற்பரசிகளின் சரிதைகளை அடிக்கடி வாசித்து, அவர்கள் செய்த மகத்தான காரியங்களையும், சாபங்களையும், அதன் விமோசனைகளையும் அறி

ந்து அவற்றை மனதில் பதித்து நடக்க வேண்டும். பெண்களாலல்லவா, அவர்களின் சகிப்புத்தன்மையாலும், பொறுமைக் குணத்தாலும் எப்படியெல்லாமோ நடந்தது. நளாயினி என்ற ஒரு பெண்தானே இரவு விடிய வே கூடாதெனச் சாபமிட்டாள். அதை நிவர்த்திக்க ஒரு ஆண்பிள்ளையாலும் முடியவில்லையே! சற்றில் அவள் தானே யாவர் வேண்டுகோளுக்கு மிணங்கி விமோசனமளித்தாள். இப்படி நம் பூர்வீக கற்பரசிகளின் மகிமை ஒவ்வொன்றையும் விரித்துரைப்பதென்றால் அதற்கு வருஷக் கணக்குச் செல்லும். அவர்களின் வழித் தோன்றலாகிய நாமும் ஏதோ நம்மாலியன்ற கடமையைச் செய்து வருவோம். யாவர்க்கும் அவரவர் செய்த நல்வினை தீவினைக்கேற்ற பலா பலனை அழிப்பதற்கு ஒருவர் இருக்கிறாரல்லவா? அவரே பார்த்துக்கொள்வார். தற்காலத்திலும் ஒருவர் குற்றம் செய்யின் நீதிஸ்தலத்திலேயே சென்று தீர்த்துக் கொள்ளவேண்டுமல்லாது, தானே குற்றஞ் செய்தவனுக்குத் தண்டனை விதிக்கலாகாது என்றல்லவா சட்டமிருக்கிறது. அப்படித்தாங்க மாட்டாது உடனே தண்டனை புரிந்தால் அதைக் குற்றமாய் எண்ணி அவனுக்குத் தண்டனை விதித்து விடுகிறார்கள். ஆதலால் நமக்கு அந்த அதிகாரம் ஏற்றதல்ல.

மோகனு: அப்படியானால் குற்றம் செய்பவர்க்கு ஒத்தாசை புரியச் சொல்லுகிறாயா?

சாவித்திரி: கணவன் மனைவிக்குள்ள கடமையைச் சொன்னேன். மற்றது இவ்வுலகத்து நீதிக்கே குற்றஞ் செய்பவர்களைத் தண்டிக்க சாதாரண மனிதருக்கு அதிகாரமில்லை என்பதைச் சொன்னேன். இவ்விடமே இப்படியிருக்கும்போது யாவற்றிற்கும் மேலான அப்பரம்பொருளின் சன்னிதானத்தில் எவ்விதமிருக்குமென்று யூகித்துக்கொள்ள வேண்டியதுதான்.

மனிதர் மூலம் கடவுள் பல சட்டங்கள் தபாரித்திருக்கிறார். அந்தச் சட்டங்களுக்குத் தப்பினாலும் கடவுளின் சட்டத்திற்கு முன்பு எதுதான் நிற்கும். அவரவர் செய்யுமவினை அவரவரே அனுபவித்துக்கொள்ளட்டும். நாம் மனிதவியின் கடமையில் வழுவாது நடந்து வருவோம். அதுவே எல்லாவற்றிலும் விசேஷமானது. அப்படிக்கின்றி நாம் கோபித்துக்கொண்டு அவர்களுடன் பேசாமலும் உணவளித்தல் முதலிய உபசாரங்களைச் செய்யாமலுமிருந்தால் அவர்கள் மேன்மேலும் வெறுப்புக்கொள்ள ஏதுவாகும். அதனால் நாம் அடையும் லாபந்தானென்ன. பெண்களுக்குக் கணவன் வீட்டு மேன்மையும் பெருமையும் மற்ற எவ்விடமும் உண்டாகாது.

"கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி" என்றபடி அவருடைய கோபம், சந்தோஷம், பொறுமை, துக்கம் இவைகளின் குறிப்பறிந்து எந்தெந்தச் சமயத்தில் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமோ அப்படியெல்லாம் நடந்து கொள்வேன். நான் மகா ஏழையானாலும் கொஞ்சமேனும் அவர் சம்பாதியம் போதாதென்றோ, நகைகள் துணிசள் வாங்கமுடியவில்லையென்றோ மனதாலும் நினைத்தறியேன். ஏதோ எம்பெருமானால் கொடுக்கப்பட்டது அவ்வளவு தானென எண்ணிச் செட்டாக எல்லாம் குறைவற நடத்தி வருகிறேன். வீட்டு அலுவல்களில் அவர் விசனம் கொள்ளாதபடி நடந்துவருகிறேன். "கந்தையானாலும் கசக்கிக் கட்டு" என்றபடி கணவன் வரும் நேரத்தில் மிகவும் புனிதமாக என்னையும் வீட்டையும் வைத்திருப்பேன். வெளிக்கிடும் போது அப்படியே போவேனேயல்லாது, இரவல் வாங்கி வேறு ஒன்றும் சோடித்துக்கொள்ளமாட்டேன். அலங்காரம் யாருக்காக? இன்னும் கேளுங்கள். புருஷருக்குத் தன் மனைவியினால் செய்யப்பட்ட ஆகாரமே மிகச் சிறந்ததாகவும் ருசியுள்ளதாயுமிருக்குமாம். நான் என் கையினாலேயே அவர் விரும்பியதையே செய்து கொடுப்பேன். சன்னுடைய சாப்பாட்டைவிட வேறொன்றும் அவருக்குப் பிடிக்காது. இன்னும் அதிகமாகச் சொல்வானேன். எவ்விதம் செய்தால் அவருக்குச் சாந்தமும் சுகமும் இன்பமும் உண்டாகுமோ அவ்விதமெல்லாம செய்வேன். இதுதான் அம்மா என் வசிய முறை.

மோகனு: சாவித்திரி இதுவரையில் நான் என் பணச் செருக்காலும் வீண் அகங்காரத்தாலும் மனைவியின் கடமையைச் சரிவரச் செய்யவில்லை. ஒரு நாளைக்கு வீட்டுக்குச் சாப்பிட வராவிடில் மறுநாள் கிட்டப்போகவும் மாட்டேன்! முகங் கொடுத்துப் பேசவும் மாட்டேன். ஒருவிதமான எண்ணம் மனதைத் தடுத்துவிடுகிறது; ஆத்திரம் பொங்குகிறது; இதற்கென் செய்வது.

சாவித்திரி: அதற்குத்தானம்மா பண்டைக்காலக் கற்பரசிகளின் சரிதைகளை அறிந்திருக்க வேண்டுமென்பது. அதையறிந்தோமானால் மேல் நாட்டுக்கல்வியும் நவநாகரீகமும் நம்மை ஒன்றும் செய்யாது. காலத்துக்கேற்ற கோலமாக வெளிப்பகட்டில் நடந்து கொண்டாலும் மனத் தூய்மைக்கும் சாந்தத்திற்கும் அது நல்ல படிப்பினையம்மா: அவற்றையறிந்தீர்களானால் வீண் அகங்காரம், நான் என்னும் அகந்தை, யாவும் நம்மை விட்டகன்றுவிடும்.

மோகனு "அப்படியானால் சாவித்திரி உனக்கு ஓழிந்த நேரங்களில் வந்து அந்தக் கற்பரசிகளின் சரிதைகளை எனக்குக் கொஞ்சம் கொஞ்சமாய் சொல்லி வந்தாயானால் ஏதும் சன்மானம் செய்வேன்" என்று சொல்லிவிட்டு சென்றாள்.

சாவித்திரி: சரிதான் தெரிந்ததைச் சொல்லி அதனால்வர்கள் திருந்தினால் அதுவே பெரிய சன்

மானத்துக் கொப்பாகுமே. அதைவிட வேறு சன்மானம்மும் வேண்டுமா ? என நினைத்தவள்ாய், பின் கணவன் உத்தரவோடு ஒவ்வொரு நாளும் மோகனு வீடு சென்று கற்பாசிகளின் சரித்திரத்தை விளக்கமாகச் சொல்லிவந்தாள். அவற்றை யெல்லாம் மிகவும் அக்கரையுடன் கேட்டு வந்த மோகனு நாளுக்குநாள் திருந்தி மகா புனிதவதியாகி கணவனுக்கேற்ற பணிவிடைகளை மிகவும் உருக்கமாகச்செய்துவந்தாள். அதன் பின்னும் மோகனு சாவித்திரியை அடிக்கடி வந்து போகும்படி கேட்டுக்கொண்டாள். வெளியில் பணத்தினால் அவர்களுக்குள் ஏற்றத்தாழ்வு அதிகமிருந்தபோதிலும் உள்ளத் தூய்மையில் இருவரும் சமமாய் மிகவும் அன்னியோன்னியமாய் நடந்துவந்தார்கள். மோகனுவே திருந்திவிட்டபோது அவள் புருஷன் திருந்தினதில் ஆச்சரியமென்ன! எல்லாம் பெண்களல்லவா! அவர் நேரத்துக்குவீட்டுக்கு வரத்தவறுவதில்லை. அத்துடன் இப்போ அவருக்கு மனவிகையால் செய்தசாப்பாடுதான் பிடிக்கும். இப்படியே மிகவும் சந்தோஷமாக தங்கள் ஏற்றத்தாழ்வைக் கொஞ்சமும் கருதாமல் இரு குடும்பமும் மிகவும் ஒற்றுமையாக இருந்து வருகின்றது. மோகனுவின் புருஷன் இவையறிந்து மிகுந்த சந்தோஷமுற்று சாவித்திரியின் கணவனுக்குத் தன் வேலைத்தலத்திலேயே ஒரு உயர்ந்த உத்தியோகம் கொடுத்து உதவினர். எல்லாம் விதி என எண்ணிச் சாவித்திரி முன்னிருந்ததில் கொஞ்சமும் பிசகாமல் நடந்து வருகிறாள்.

—பதிபத்தினி.

—:o:—

எங்கள் செல்வச் செல்வி * * * கலைக்கோர் உயிர்வு. * * *

நமது யாட்பாணச் செல்வ செல்விகள் இதை நன்கு வாசித்து ஆகவேண்டிய விதிகளை முன்னிகொண்டு எங்களுடைய சுயதேசமாகிய யாட்பாணத்தை நன்கு பாராட்டத்தக்க நிலைமையிற் கொண்டு வருவது அடியார்களுடைய தொழில் அல்லவா? அதாவது நாங்கள் எங்களுடைய சுயதேசத்தைமறந்து இவ் அன்னிய நாடாகிய மலாய்த் தீபகற்பத்திற் குடியேறி சிறு முயற்சிகளையும் கையாடி வருஷக் கணக்காக இருந்து சீவியம் செய்து அதன்பின் தாய்நாடு எகி விவாகம் செய்து பின்னல் இத்தீபகற்பத்திற்குத்திரும்பி இருவர்களும் பழைய தொழில நடத்திக் கொஞ்சக் காலம் போனபின் மக்வுகளையும் ஈன்றெடுத்து, அவர்களை அன்பாக வில உயர்ந்த அன்னியர் செய்த கொக்கிலற என்ற இனிய பதார்த்தங்களையும்கொடுத்து ஆசையாய் நேசித்து வருகிறோம். இது எங்கள் அறியாமை அல்லவா?ஏனெனில் எங்கள் தாய் நாடாகிய யாட்பாணத்தின் பனம்பழத்திலே ஒரு வகையான கொக்கிலட் இருக்கிறது அல்லவா. நல்லாய் யோசித்துப் பார்ப்போம். அதை நாங்கள் பனட்டு என்று அழைக்கிறோம். அவ் அன்னியர் செய்யும் பண்டத்தை நாங்கள் செய்து எங்கள் பிள்ளைகளுக்கு உபயோகிக்கப்படாதா? அதில் விற்றமின் என்ற சத்து எவ்வளவு விகிதமுண்டு என்பதை உற்று யோசிக்க வேண்டும். அதற்கு உதாரணம் எங்கள் மூதாதையர்கள் பனட்டு என்ற கொக்கிலட்டை உபயோகித்து திடகாத்திரமாய் நூறாண்டுக்கு மேலிருந்து வந்தார்கள். தற்காலத்தில் விற்றமின் என்ற சக்திக் குறைவால் கொடிய வியாதிகள் உட்சென்று 30, 40ல் பரலோக சஞ்சாரத்தை அடைவதுமல்லாமல் ஏஞ்சினோர் தீரா நோயாளராய் விளங்குகிறார்கள்

பனட்டென்ற சொக்கிலற்றில் தேகாரோக்கியம், மலச் சிக்கலை எடுக்கும் சக்தி, தாகத்தைத் தவிர்க்கும்வீரியம், மூத்திரப்பைக்கோச் சுற்றமாக்கும் தன்மை, வாயுவென்னும் கொடிய வியாதியை அப்புறப் படுத்தும் குணம் எல்லாம் உண்டென்று கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆதிகாலத்தில் எங்கள் மூத்தோர் பேதி என்ற மருந்தூட்டகொண்டதை கேள்விப் பட்டதுண்டா? தற்காலத்தின் மனிதர் கிழமைக்கு 3 பேதி வீதம் சாப்பிட்டு தேகாரார்க்கியமும் குறைந்து, நடக்கச்சக்தியும் அற்றுப் போகிறார்கள். ஆனபடியால் எங்கள் சுயதேசமாகிய யாட்பாண சொக்கிலட்டை என் முன்னேற்றத் தெண்டிக்கக்கூடாது. என்வீணைகப்பாடுபட்டுப் பலசாதி செய்தபொருட்களை உபயோகித்து, சரீரத்தையும் கொடியவியாதிக்குள்ளாக்கி, கடசியில் வைபித்தியரைத் தேடுவான? அத்துடன் இதை உலகம் யாபேருக்கும் பரவச் செய்தால் எங்கள் நாடு செழிப்படையாதா? ஆனபடியால் எங்கள் சகோதர சகோதரிகள் எங்கள் தாய் நாடு முன்னேற்ற மடைய இவ்விஷயத்திலாவது சிரம்ம எடுங்கள்.

உங்கள் அன்பான

யாட்பாணத் தேசிகன்

* * சரஸ்வதி * *

——:o:——

நான் முன் சினேகிதிவீடு போனதும் அங்கு நடந்த சம்பாஷணையும், பின் வீடுவந்து எல்லாம் புனிதமாக வைத்திருந்ததும், அது பார்த்த என் நாதர் இன்னும் அவளிடம் சென்று கற்று வரும் படி சொன்னதும் எல்லாம் "மோரின் நன்மை" என்றதில் எழுதியிருக்கிறேன்.

அதன்படி இன்னொரு நாள் என் சினேகிதி வீடு சென்று அவளுடன்சம்பாஷித்ததும், அதில் அவள் பிள்ளைகளுக்கு சல்லிப் பெட்டிகள் கொடுத்துக் காசை வீணில் செலவழிக்காமல் பழக்கும் விதமும், இன்னும் நம் சகோதரிகளுக்கு சிக்கனத்தை அறிவிக்க விரும்பினதும், அது அறிந்த என்நாதர் மற்றவர் அறிய விரும்பாவிடில் என்ன செய்வது என்று சொல்ல, அதற்கு நான் சொன்ன மறுமொழியும் எல்லாம் "நான் மட்டும் கற்றுக் கொண்டால் போதுமா" என்ற தலையங்கத்துடன் எழுதியுள்ளேன்.

அதன் பின் கொஞ்ச நாட்களாக என் சினேகிதி வீட்டிற்குப்போக சந்தர்ப்ப மேற்படவில்லை. ஒரு நாள் என் சினேகிதி வந்தாள். வரும்பொழுது "ஏது நெடு நாளாக அந்த பக்கம் காணவில்லையே. நான் வரவில்லையென்று விட்டு விட்டாயோ" என்று சொல்லிக் கொண்டே வந்தாள்.

நான்: (வந்தவளை மரியாதையாக வரவேற்று உட்கார வைத்துவிட்டு) அப்படி எண்ணுதே. உனது குணம் இவ்வளவு காலமும் எனக்குத் தெரியாதா? சிலபேரைப்போல் கொஞ்சம் பிகுவாக இருக்கவேண்டும் என்ற எண்ணம் உனக்கிருக்குமாகில் நானும் கொஞ்சம் பெருமை காட்டித்தானிருப்பேன். செய்தார்குச் செய்வது செத்த பிறகல்ல. ஒருவர் எல்லாச் சவுக்கியத்தோடும் இருக்கும் போது காட்டும் அன்பு உண்மையன்பாக மாட்டாது. தன் செயலற்று வருத்தப்படுக்கையிலிருக்கும்போது காட்டும் அன்பும் பட்சமுமே உண்மை அன்பின் செயல். அதுவே மனசில் ஆளமாய்ப் பதிவது. நீயோ எங்கள் வியாதி தொற்றிவிடுமே என்று கூட எண்ணுமல் நாளிலும் பொழுதிலும் வந்து எங்களுக்குச் செய்த அரிய உதவியை, நாங்கள் நினையாத நேரமில்லை. நான் ஒரு புறம் வருத்தமாயிருக்க, என் குழந்தைகளைப் பெற்ற தாயினும் கரிசனையுடன் பார்த்துவந்த உனது அன்பை வியந்து நாங்கள் பேசாத நாளுமுண்டோ? அப்படியிருக்க நீ இப்படி எண்ணலாமோ.

அவள்: அந்த ஸ்தோத்திரமெல்லாம் போதும். உண்மைச்சினேகம் உற்றார் உறவினரிலும், மேலல்லவா? இது ஒரு பிரமாதமா? உன்னை நெடு நாட்களாக அந்தப்பக்கம் காணவில்லை. அதுதான் என்னவோ ஏதோ என்று கேட்டேன்.

நான்: சமையற்காறன் சுகமில்லை யென்று போய்விட்டான். இப்போ நான்தான் சமைக்கிறேன். அதனால் அதிகமாக வெளிப்போக நேரம் கிடைப்பதில்லை.

அவள்: இப்போ எப்படிச் சமைக்கிறாய்? சமையல் வேலை பிடித்துக் கொண்டதா?

நான்: என்ன செய்வது! பிடித்ததோ பிடிக்கவில்லையோ சமைத்துத்தானே தீரவேண்டும். ஆனால் அதில் எவ்வளவு மிச்சமென்பதை அறிந்தபின் "அடடா வீணாக இவ்வளவு காலமும் எவ்வளவைத்தான் கொட்டினேனோ" என்று மிக வருத்தமேற்படுகின்றது. அதனால் நான் சமையல் செய்வது இப்போ எனக்குக் கஷ்டமாகவே தோற்றவில்லை.

அவள்: நான் சொன்னால் நீ நம்ப மாட்டாய். அவனென்ன அள்ளிக் கொண்டு போகிறானே? என்று கேட்பாய். இப்போ எப்படி அறிந்து கொண்டாய்?

நான்: அவன் மாசம் முடிந்து பனிரண்டு நாள் வேலை செய்துவிட்டுச் சுகமில்லை என்று சென்று விட்டான். அதன்பின் நான் தான் சமைத்து வருகிறேன். இப்போ மற்றபாசமும் முடிந்து பதினைந்து நாட்களாய் விட்டன. வந்து பார், எங்கள் உக்கிராண அறையை.

இன்னும் இந்த மாசம் முடியுந்தனையும் இருக்கும் சாமான் போதும் போல் இருக்கிறது. சரியாக இரண்டு மாசத்துக்குக் காணக் கூடிய பொருள் ஒரு மாசத்திலேயே செலவழிந்து விடுவதானால் ஆருக்கும் வயிற்றெரிச்சலாயிருக்கும்தானே. நான் இவ்வளவு காலமும் ஒன்றையும் கவனிக்கவில்லை.

அவள்: தானே சமைப்பதால் எவ்வளவு மிச்சமென்பதை அறிந்தாயா? முதலில் சமையலாளின் சம்பளம்; இரண்டாவது மாசச் செலவு சாமான்கள்; அது மட்டுமா? இன்னும் நாம் புனிதமாய் செய்தால் விருப்பத்துடன் சாப்பிடலாம். அப்படி நாமே சமைத்துச் சாப்பிட்டால் பசிக்கவில்லையே என்று மருந்து தேடவேண்டிய அவசியமில்லை. வேலை செய்வதால் நம் சரீரம் பெலமடைந்து நோய் தலைக்காட்டாது. ஆதலால்

மருந்துக்குக் கொடுக்கும் காசு மிச்சம்தானே. எல்லாவற்றிற்கும் கணக்குப் போட்டுப்பார். எவ்வளவு ஆகும்! சமையலாள் சென்றுவிட்டான். நான் சமைக்கிறேன் என்று சும்மா விட்டு விடாமல், சமையலாள் இருப்பதாகவும் அவனுக்கு மாசவீதம் சம்பளம் கொடுப்பதாகவும் எண்ணி அதை நமக்கென ஏற்படுத்தியிருக்கும் ஐக்கிய சங்கத்தில் போட்டுவை. அப்போ கொஞ்சக் காலத்தில் அறிவாய் அது எவ்வளவு என்றும், என்ன காசென்றும்.

நான்: நீ சொல்வதுபோல் இப்போ நானே சமைக்கத் தொடங்கியபின் எவ்வளவு விருப்பமாகச் சாப்பிடுகிறேன். நான் மட்டுமல்ல, பிள்ளைகள் தகப்பன் யாவருமே ஒன்றும் சொல்லாமல் சாப்பிடுகிறார்கள். முன்னால் அது சரியில்லை; இது கூடாது என்று எத்தனை சொல்வார்கள். இப்போ ஒன்றும் பேசாமல் மனத்திருப்தியோடு சாப்பிடுவது எவ்வளவு ஆறுதலாயிருக்கிறது.

அவள்: அது என்னத்தினாலென்பது அறிவாயா? நீ சமைக்கும் போது துப்பரவாக, "இது என் குழந்தைகளுக்கு விருப்பம்; இது என் கணவருக்கு விருப்பம்" என்பதை அறிந்து கரிசணையோடு செய்கிறாய். மற்றவர்களுக்கு அந்தக் கரிசனை உண்டாகுமா? கடமைக்கு "எப்போ முடித்துவிட்டுச் சற்றே ஆறுதலாயிருப்போமோ" என்று அவசரமாக முடித்துவிட்டு இருப்பார்கள். அந்தக் காசை சங்கத்தில் போட்டு வைத்தாயானால் அப்போ நீ கஷ்டப்பட்டதினால் சேர்த்த பணத்தை எண்ணிப்பார்ப்பாய்.

நான்: நானும் அப்படித்தான் எண்ணியுள்ளேன். இனி என் பர்த்தா என்ன சொல்லுவாரோ!

அவள்: நீயே கஷ்டப்பட்டுச் சமைக்கும்போது அந்தக்காசை அப்படியே சேர்த்துவைக்கும்படி கேட்பதில் அவர் சந்தோஷமடைவாரன்றிச் சொல்வதற்கென்ன இருக்கிறது.

நான்: அது நியாயந்தான். நான் அந்தக் காசைச் சேர்த்து வைக்கவே முயற்சிப்பேன். அது அப்படி இருக்க:—அன்று பேசிய விஷயங்களென்ன எல்லாம் மறந்துவிட்டோமே.

அவள்: என்ன விஷயம்.

நான்: நம் சகோதரிகளுக்கு நாம் அறிந்ததைப்பற்றியும் ஐக்கிய சங்கத்தைப்பற்றியும் அறிவிக்க யோசித்தோமே அதன் முடிவென்ன.

அவள் ஓ அதுவா! அதற்குத்தான் நம் சகோதரி "வழிகாட்டியானவள்" வெளிப்பட்டு மூலை முடுக்கு என்றும், பட்டினம், நாடு என்றும், செலவர் வறியவர் என்றும், யாதொரு வித்தியாசமும் பாராட்டாமல் தன் சகோதரிகளைச் சந்தித்து யாவருக்கும் தன் அனுபவத்தைப்போதிக்க முன் வந்துள்ளாளே! அவள் நம்மிலும் பார்க்கக் கற்றறிந்தவள்; தேவபக்தி உள்ளவள்; உலக அனுபவங் கூடியவள். யாவர் கருத்தையும் எழிதில் அறிந்து கொள்ளும் ஆற்றலுடையவள். தேச பக்தியுள்ளவள். இன்னும் அவள்:—

"தனக்கு வெகு புத்தியுண்டாகினும் வேறொ
தன் புத்தி கேட்க வேண்டும் [ருவர்
தானதி சூரனேயாயினும் கூடவே
தளசேகரங்கள் வேண்டும்
கனக்கின்ற வித்வானுகிலும் தன்னிலும்
கற்றோரை நத்தவேண்டும்
காகினியை யொரு குடையிலாண்டாலும்
கருத்துள்ள மந்திரி வேண்டும் [வாசலிற்
தொனிக்கின்ற சங்கீத சாஹித்தியனுகிலும்
சுதி கூட்டவொருவன் வேண்டும்
சுடர் விளக்காயினும் நன்றாய் விளங்கிடத்
தூண்டு கோலொன்று வேண்டும்"

என்ற ஆன்றோர் வாக்குப்படி தன் புத்தியுடன் மட்டும் செல்லாமல், கற்றறிந்த மற்றும் சகோதரிகளின் புத்திமதிகளையும் சிரமேற்றாங்கி நம்மவர்க்கு உதவி புரிய முன் வந்துள்ள "வழிகாட்டி"யின் அரிய தொண்டை மெச்சிப் புகழ்மாலைகளைச் சூடுவதல்லால் வாய்வீரம் பேசும் நம்மால் வேறு என்ன உதவி செய்ய முடியும்?

நான்: வழிகாட்டி நம்மவர்க்குப் புரிந்துவரும் நன்மைகளை மெச்சிப் பேசாதவர் கற்றறிந்த நம் சகோதரரில் இல்லை யெனலாம். அவ்வளவாக அவள் யாவராலும் விருப்பத்துடன் வரவேற்கப் படுகிறாள். மாசமொருமுறை தன் சகோதரிகளைச் சென்று தரிசிக்காவிடில் அவளுக்கு நித்திரையே வருவதில்லையாம். அவள் வீடுகளுக்குப் போக இரண்டொரு நாள் பிந்திப் போய் விட்டாலும் அவளை வரவேற்பவர்களும் மிகவும் அந்தரப்பட்டு விசாரிக்கிறார்களாம். போனமாசச் சஞ்சிகையில் ஆங்கிலத்தில் பேசுங் கருவியால் அவர்கள் கூப்பிட்டுக் கேட்கும் விதம் போட்டிருந்தார்கள் பார்த்தாயா?

அவள்: நான் பார்க்கவில்லையே! ஆங்கிலப் பகுதி அவ்வளவு அக்கரையாக நான் பார்ப்பதில்லை. அவ்வளவு ஆவலாகவா அவளைத் தேடுகிறார்கள்? அப்படியானால் நம்மவர் இனிச் சிக்கனமாக நடந்து வருவதற்குத் தடையென்ன? இவ்வளவு அரியதொண்டாற்றி வரும் வழிகாட்டிக்கும் அவளுக்கு உதவி புரிந்து வரும் அறிஞர்க்கும், பெண்களாகிய நாமும்மிக்க கடமைப்பட்டவர்களாகிறோம். அவளின் உண்மையான போதனையை அறிந்தவர்கள் புத்தியுடன் அதை ஏற்றுக் கொள்வாரென்பதற்குத் தடையேதும் உளதோ.

நான்: ஆங்கிலம் படித்தவளாயிருந்தும் நீ அந்த ஆங்கிலப் புதினத்தை வாசியாதிருப்பது எனக்கு மிக மனவருத்தமா யிருக்கிறது. அதில் ஒரு சகோதரர் சீதனத்தைப்பற்றி எழுதியிருந்தி ரூர். இன்னும் ஒருவர் ஏதோ ஐக்கிய சங்கங் கள் அவசியமற்றது என்று ஒருமுறை எழுதி யிருந்தாராம். அதைக் கண்டித்து எத்தனை சகோதரர் ஆர்வமுடன் எழுதியிருப்பதைப் பார். ஒருவர் ஒன்றைத் தொடங்கினால் அதைக் கெடுப் பதற்கு சிலர் முயன்று நின்றபோதிலும், உண்மை யை அறிந்த மேதாவிகள் பலர் ஒன்று கூடி அதை ஸ்தாபிக்க முற்படுவதெல்லாம் பிரத்தியட் சமாய்க் காண்பாய். அப்படியாய் நடந்து வருவ தால்லவோ உலகம் வரவர முன்னேற்றமடைந் தது. இவை யெல்லாவற்றையும் பெண்களாகிய நாமும் அறிந்திருப்பது நல்லதுதானே.

வழிகாட்டி உண்மையாக எங்களுக்கு உதவி புரிந்து வருகிறதென்பதை இன்னொரு முறை நான் எடுத்துரைப்பது அவசியம். அதிகமா கப் புகழ்ந்தால் அவளுக்கு கர்வீறுபட்டு ஏதும் சுகவீனம் ஏற்பட்டாலும் ஏற்பட்டுவிடும். ஆத லால் அதைவிட்டு அன்று கோயிலில் ஏதோ தொ டங்கினோமே அதுபற்றிப் பேசுவோம்.

அவள்: சொல்லுகிறேனென்று குறை நினை த்துக் கொள்ளாதே. அன்று கோயிலடியில் உனது துணியைப்பற்றியே தொடங்கினேன். உனது சேலையைப் பார்த்ததும் எனக்கு உன்னு டனிருந்து கதைக்கவே வெட்கமாய்விட்டது.

நான்: என் துணியில் என்ன அவ்வளவு அசங் கியம். நான் பட்டுச் சேலைதானே கட்டியிருந் தேன்.

அவள்: அதுதான் வெட்கமென்றேன். மகா புனிதமான கோயில்சன்னிதானத்திலுமா இப் படிப் போவது.

நான்: ஏன்? பட்டுச் சேலைகட்டக் கூடாதோ! அன்று ஒரு நாள் உபந்நியாசத்தில் பட்டு சுவா மிக்குத்தான் ஏற்றதென்று சொன்னார்களே. அதற்காகச் சொல்லுகிறாயோ?

அவள்: இல்லை! அதற்காகச் சொல்லவில்லை. பழைய காலத்தில் பட்டுமிக அருமையாயிருந்தி ருக்கும்; அதை மிகப் பக்தியாக சுவாமிக்கு தரி த்துவிட்டு மற்றவர் பருத்தி கட்டியிருப்பார்கள். ஆனால்இப்போதான் பட்டு மூன்று வெள்ளி, இர ண்டு வெள்ளிக்குக் கூட அகப்படுகிறதே. அப் படியிருக்க யாரும் கட்டுவதற்கு தடையென்ன.

நான்: அப்படியானால் கோயிலில் கீழே உட் காரவேண்டுமே; அதனால் அழுக்காகி விடுமென்ப தற்காகச் சொல்லுகிறாயோ!

அவள்: பட்டைக்கட்டிக் கொண்டு நீ விழு ந்து கும்பிடப்பட்டபாடும்கீழே உட்காரப்பட்ட கஷ்டமும் நான் கண்டதுதான். ஆனால் நான் அதற்காகவும் சொல்லவில்லை. தோய்த்து லர்ந்த வஸ்திரமே கோயிலுக்குத் தரிக்கவேண்டும் என்பதற்காகவே சொன்னேன். கந்தையான் லும் கசக்கிக் கட்டிக்கொண்டு போக வேண்டுமல் லால் அழுக்கு வஸ்திரத்துடன் புனித ஸ்தலத் துக்குப் போகலாமா?

நான்: பட்டில் என்ன அழுக்கு இருக்கப் போகிறது. அந்தச் சேலை வாங்கி நாலு வரு ஷம் தானே ஆகிறது. அதற்கிடையில் பத்துப் பனிரண்டு தடவைதான் பாவித்திருப்பேன் அவ் வளவுதான்.

அவள்: பத்துப் பன்னிரண்டு தடவை பாவித் திருப்பாயா? அதற்கிடையில் எத்தனை தடவை தோய்த்திருப்பாய்?

நான்: பட்டுச் சேலையை யார் தோய்க்கப்போ கிறார்கள்? தோய்த்தால பழுதாய்ப் போகாதோ?

அவள்: அதற்காகத்தான் கேட்டேன். தோ ய்க்காமல் இத்தனை நாள் உடுத்தும் போது பட் டவேர்வையும் அந்தச் சேலையில் தானே. சட்டை யும் பட்டானதினால் அப்படித்தானே இருக்கும். அத்தனை வேர்வையும் நம் உடம்பிலிருந்து கழி யும் அழுக்குத்தானே. அந்த அழுக்குடன் கோ யிலுக்குப் போதல் எவ்வளவு அசங்கியம் என் பதை உற்று யோசித்துப்பார். நாம் எம்பெருமா னின் சன்னிதானத்துக்குப் போகும் போது எப் படியான தூய்மையுடன் போகவேண்டும். கோ யில் என்றதும் எங்கள் மனதில் உதிப்பதென்ன! அப்படியான பரிசுத்தமான இடத்திற்குப் போ கும் போது அகத் தூய்மை, புறத்தூய்மை இர ண்டும் அவசியமல்லவா? இதோபார் நாம் குளிக்கி றோம்; அழகாக மேலெங்கும் வாஷமான சவுக்கா ரம் எல்லாம் போட்டுத் தேய்த்து குளிக்கிறோம். அப்படிக் குளித்து விட்டுவந்து தோய்காத துணி யை அணிந்தால் மனசுக்கு என்னவாயிருக்கும். அப்படிக்கின்றி இன்றைக்குகுளிக்கவில்லை என்று வைத்துக்கொள்வோம். குளிக்காமல் துணியை மட்டும் தோய்த்த துணியை அணிந்துகொள்ளு கிறோம்; அப்போ எப்படியிருக்கும். எங்கேசொல் பார்ப்போம்.

நான்: இரண்டும் ஏறக்குறையச் சரியாகவே இருக்கும். குளித்துவிட்டு தோய்த்த வஸ்திரம் உடுத்தினால்தான் மனசுக்கு ஆரோக்கியமாயிரு க்கும்.

அவள்: பார்த்தாயா வித்தியாசத்தை. மற்றைய இடங்களில் எப்படியான அழுக்குடன் சென்று வந்தாலும், மகாபுனிதமான கோயில் சன்னிதான த்திற்கு புனிதமான தூய வஸ்திரமே சிறந் தது.

நான்: அப்படியானால் பட்டுக் கட்டவே கூடாதென்கிறாயா? வெள்ளைத் துணி கோயிலுக்குக் கட்டக் கூடாதென்று அன்று ஒரு சகோதரி சொன்னாளே?

அவள்: பட்டுகட்டக் கூடாதென்று நான் சொல்லவில்லை. பட்டானாலும் வேர்வை அழுக்குப் போக தோய்த்தே கட்டவேண்டும். அப்படியின்றி தோய்க்க முடியாத பட்டுக்களை வேர்வையுடன் கட்டுவது எங்களுக்குமட்டுமல்ல; அருகில் நிற்பவர்களுக்கும் எவ்வளவு அருவருப்பாக இருக்கும் என்பதை சிந்தித்துப்பார். நாம் யாவரும் ஒருமிக்க நெருக்கினால் போல்தானே நின்று கோயில் தரிசனம் செய்கிறோம். அந்த வேர்வை நாற்றம் அப்படியே நமக்கு பக்கத்தில் நிற்பவருக்கு வீசாதா? ஒரு முறை சுற்றிவந்து கும்பிட்டு முடிய எப்படித்தான் வேர்த்துப் போகிறது பார்த்தாயா? அவ்வளவும் துணியில்தானே படிந்துவிடுகிறது. பின் அதைக் கொண்டுபோய் பக்குவமாய் மடித்து வைத்துவிட்டு எடுத்துக்கட்டினால் நாற்றமாய் வீசாதா? தோய்க்கக் கூடிய சாதாரண துணியானால் உடனே அலம்பிப் போட்டு விடலாம். எல்லாம் துப்பரவாய்விடும். வெள்ளை கோயிலுக்குக் கட்டக் கூடாதென்று சொல்லுகிறாய். அப்படியானால் அத்தனை ஆண்களும் வெள்ளைதானே உடுத்தி மகா புனிதமாக வருகிறார்கள்; நீ காணவில்லையா? வெள்ளை அமங்கலிகள் கட்டுவதென்பதற்காகச் சொல்லுகிறாய்க்கும். ஆனால் தற்காலத்தில் சுமங்கலிகள் வெள்ளை கட்டுவதில்லையோ? இந்துக்களிலும் சிலர் கூறைக்குக் கூட வெள்ளை எடுக்கிறார்களே அது எவ்விதம்?

நான்: (அவள் சொல்வது உண்மையானதினால் எனக்கு பதில் சொல்லவே தெரியவில்லை) அது எப்படியிருக்கினும் நான் பட்டுக்கட்டாமல் ஒரு இடமும் சென்றதே கிடையாதே! அப்படியிருக்க இனி எப்படிச் சாதாரண துணியுடன் வெளிக்கிடுவேன்.

அவள்: கோயிலில் எத்தனைபேர் புனிதமாக வருகிறார்கள் பார்த்தாயா? அவர்கள் உன்னைப் பார்த்தால் எப்படித்தான் பரிகசிப்பார்களோ! என்னைப்போல் உனக்குக் கிட்ட வரவும் அருவருப்பார்களன்றோ! அப்படி உனக்கு சாதாரண புனிதமான துணி கட்டிப்போக மனமில்லாவிடில் தோய்த்து உடுக்கக்கூடியதாக இரண்டு பட்டுச் சேலையை வாங்கி மாறி மாறிப் பாவிக்கலாம். அவ்வளவும் தான் நான் செல்லக்கூடியது.

நான்: இரண்டு சேலையென்கிறாயே. இரண்டு இரண்டு கிழமைக்குக் கட்ட, பார்த்தவர் என்ன நினைப்பர்.

அவள்: அட மூடமே! நீ சுவாமி தரிசனத்துக்குப் போவதிலும் போகாதிருந்துவிடுவது நல்லது. அவ்விடம் வரும் யாவரும் உன்னைப்போன்ற சிக்கனையுடனே வருகிறார்கள். அவர்கள் உண்மையான பக்தியுடன் கோயில் தரிசனத்துக்கு வருபவர்களேயொழிய மற்றவரின் உடை நடை பார்ப்பதற்கு அல்ல என்பதை நன்றாக மனதில் பதித்துக்கொள். பயித்தியக்காரியாகிய நீ அப்படியான பகட்டான எண்ணத்தினால்தான் அப்படி உன்னைச் சோடித்துக்கொள்கிறாயோ. பகட்டுக்காரியே! நீ கோயிலுக்குச் சென்று இன்னும் பாவத்தைத் தேடிக் கொள்ளாதே. பரிசுத்த மனதுடன் கோயில் தரிசனம் பெற ஏங்கி வரும் மற்றச் சகோதரிகளின் புனிதத்தன்மையையும் கெடுத்துவிடாதே பாவி. (என்று படபட வென்று கூறிவிட்டாள்.)

எனக்கோ கோபம் பொங்குகின்றது. என்னை நான் பகட்டுக்காரியா? பாவியா? என்று என்னையே கேட்டுப் பார்க்கிறேன். பேச நா எழவில்லை. என் உள்ளுக்கு இருந்து ஏதோ ஒன்று "அவள் சொல்வது நிசந்தான்" என்று சொன்னது போலிருந்தது. என்னையே நான் வெறுத்தேன். உண்மையில் நிசமாகவே நான் பார்த்தவர் பரிகசிக்கும்படி நடந்துவந்துவிட்டேன்? ஆனாலும் இவள் இப்படியெல்லாம் பேசலாமா? அவளுடன்தான் கோபமா? அல்லது என்னுடன்தான் கோபமா? என்று ஒன்றுமே புரியவில்லை. மனமோ பலவிதஎண்ணங்களால் அல்லலுறுகின்றது. மௌனம் கலக நாஸ்தி என்று கம்மென்றிருந்துவிட்டேன். இப்படியான நிலையில் என்னைப் பார்த்துவிட்டுப்போலும்.

"என்ன சரஸ்வதி யோசனை போலிருக்கிறதே. கோபித்துக் கொண்டாயோ. நான் உனது உண்மைச் சிநேகிதியானதால் இப்படி நேரில் கண்டித்தேன். போலிச் சினேகிதரானால் உன்னுடன் கூட இருக்கும்போது நீ செய்வது சரியென்று சொல்லி விட்டு கண்காணா இடத்தில் பரிகசிப்பார்கள். வீணாக மனதைப் புண் படுத்தாதே. யோசித்துப்பார். எனக்கும் நேரமாகிறது; சென்று வருகிறேன். அடுத்த கிழமை சந்திப்போம்; எல்லாம் பேசிக்கொள்வோ" என்று சொல்லி வீடு சென்றுவிட்டாள்.

என் சிநேகிதி சென்றபின் நானும் என்னுதெல்லாம் எண்ணி மனம் புண்ணானேன். மற்றவர் என்னைப் பார்த்துப் பரிகசிப்பதுபோல் என் அகக்கண் முன் தோன்றிற்று. எனக்குப் புத்தி புகட்டிய என் அன்பார்ந்த சிநேகிதியின் தூய்மையான அன்பை வியந்தேன். கோயிலுக்கு போகும்போது தாங்களும் தோய்த்து வெளுத்த துணியையே மறுபடி தோய்த்து மகா புனிதமாக அணிந்துகொண்டு போகும் நம் மூதாதையரின் பக்தியை மெச்சினேன். என் மனமும் தூய்மையானது.

கற்றதனலாய பயனென் கொல் வாலறிவன்
நற்றாள் தொழாரெனின்.